# ஆசானுமானவன்

சிறுகதை

● மணிமாலா மதியழகன்

கணவரிமிருந்து வாங்கிக் குவிக்கும் வசவுகளைத் தாங்காது, சன்னல் வழியேவந்துகுசலம் விசாரித்த தூவானத்தை ரசித்தஎனக்கு உள்ளுக்குள் சிலிர்த்தது. சிலுசிலுவென்ற காற்றோடு முகத்தில் முத்தமிடும் மழைத்துளிகள், ரணமாகியிருக்கும் இதயத்தை இதமாய் ஊடுருவின. இந்த இயற்கைக்குதான் என்மேல் எவ்வளவு காருண்யம்? மழைநீர் பட்டதுமே களிமண்ணால் செய்த தேகத்தைப்போல துடித்துப் போகிறவர்களைக் கண்டு என்னுள் புன்னகை துளிர்க்கும்.

"மழை பெய்யுது, சன்னலை மூடாம லூசுமாதிரி சிரிக்கிறே" சமீப காலமாய்ப் பழக்கப்பட்டுப்போன கணவரது கடிந்துரைகள் நினைவுக்கு வந்து மனத்திலிருந்த மகிழ்ச்சியைத் துடைத்துச் சென்றன. மகதி என்ற என்னை எப்பவோ மறந்து போனவர். 'லூசுபோல இந்த வார்த்தையை எப்போதிருந்து பிரயோகிக்க ஆரம்பித்தார்?' நினைவுக் குப்பையைக் கிளறிப் பார்க்க, அதிகநேரம் தேடத் தேவையின்றி இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் தூசின் நெடி தாளாது தும்மல் பிறக்க, விழிகளைத் துடைத்துக் கொள்கிறேன்.

'ஆம்...இப்போது உயர்நிலை இரண்டில் படிக்கும் மகன் மகிந்தன் என்னுள் தரிப்பதில் ஆரம்பித்த பிரச்சினை, அவருக்கு உறைத்தது என்னவோ சமீபமாகதான்' விடை கிடைத்த நிம்மதியில் என்னுள் விரும்பத்தகாத நினைவுகளும் சேர்ந்துகொண்டன...

"எப்படி நீங்க அன்னைக்குப் பார்த்த மாதிரியே இருக்கீங்க?" திருமணமான பின்பும் நான் கல்லூரி மாணவியைப்போலவே இருப்பதால் சுற்றத்தினர் அடிக்கடி என்னிடம் இந்தக் கேள்வியை எழுப்புவர்.

திருமணமாகி பல வருடங்களைக் கடந்த பின்பும் தாய்மையடையத் தாமதமாகியது. கலக்கத்தில் சிறப்பு சிகிச்சை மேற்கொள்ள, நம்பிக்கை உதித்தது. முடிந்தளவு ஓய்வில் இருப்பதுதான் நல்லது என மருத்துவர்கள் அறிவுறுத்தினர். அதுவரை செய்துகொண்டிருந்த மனத்திற்குப் பிடித்த வேலையை மனமின்றியே கைவிட்டேன். அறுவை சிகிச்சையின் மூலம்தான் மகன் மகிந்தன் பூமியில் அவதரித்தான். தாமதமாய்க் கிடைத்த சொர்க்கத்தில் நாங்கள் எங்களை மறந்து திளைத்திருந்த சமயம் அது. அப்போதே உடம்பு சற்று பூசினார்போலானது. 'எலும்பும் தோலுமாய் இருப்பதைவிட

இப்போதான் இன்னும் அழகா இருக்கே' என்ற கணவரது வசீகரப் பேச்சில் வசியமானவள் என்னை மறந்தேன்.

ஆரம்பத்தில் சரியான பணிப்பெண் அமையாத நிலை ரொம்பவே சோதிச்சது. நல்ல உதவியாளர் கிடைத்த பிறகோ ஒட்ட மாட்டேனென மகன் மூச்சுத் திணறல் வருமளவிற்கு அழுது ரகளை செய்தான். குழந்தையைப் பார்த்துக்கொள்வதே என் முழுநேரப் பணியாய்ப் பயணிக்கும் நிலைமைக்கு ஆளானேன். மகன் பள்ளிக்குப் போனபிறகு வேலைக்குப் போகலாம் என நினைக்க, அதுவும் முடியாது போனது.

பக்கவாட்டில் வளரும் உடம்பைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாது இருக்க, ஆண்டுகள் உருள உருமாறி நின்றேன். பொதுப்போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கையில் இருக்கைகளை புன்னகையுடன் அளிக்க முன்வருபவர்களைக் கண்டு உள்ளம் உடைய, ஒடுங்கிப் போனேன். "இவங்க என்ன எப்போதுமா இப்படி இருப்பாங்க?" என்றாவது யாராவது இந்தக் கேள்வியை எழுப்பிவிட்டால்? கணவரிடம் சஞ்சலத்தைக் கூற "நல்லா நடந்தால் உடம்பு இளைச்சுடும்" என்று சமாதானப்படுத்துவார். நானும் இரண்டு நாள் நடப்பேன். அடுத்ததாக அதை மறப்பேன்!

ஒருமுறை லிட்டில் இந்தியாவுக்குப் போய் வீட்டுக்குத் தேவையான பொருட்களையெல்லாம் வாங்கிய பிறகு, சில நிமிடங்களில் வரப்போகும் 'கிரேப் டாக்சிக்காகக்' காத்திருந்தேன்.

"இங்க அரிசி எந்தக் கடையில கிடைக்கும்?" என்று ஒருவன் கேட்க நானும் கர்மசிரத்தையாகக் கடையைக் கூறினேன். நமுட்டுச் சிரிப்புடன் நண்பனோடு அவன் கடக்க என்னுள் எரிமலை உருவானது. அனலை மூட்டிச் சென்றவர்களைப்பற்றி வீட்டுக்கு வந்ததும் கணவரிடம் கதறினேன்.

"அடுத்தவங்க பேசுறதைப் பத்தில்லாம் நினைச்சி கலங்காதே மகதி. தொடர்ச்சியா உடற்பயிற்சி செய்து, உணவுக் கட்டுப்பாட்டோடு இருந்தா நீ நிச்சயமா பழையபடி ஆகிடுவே" கணவரது வார்த்தைகள் ஊக்கமருந்தாகின.

நானும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள, அதுவும் சில நாட்களுக்குமேல் தாக்குப்பிடிக்காது. கொஞ்சம் சாப்பாட்டைக் குறைத்தால் பிரிட்ஜை திறந்து ஏதாவது கிடைக்கிறதா என மனம் தேட விழைந்தது!

"இது பெரிய விஷயமில்லைடா. நீ மனசு வச்சா மாற்றிவிடலாம்" அன்று அப்படி கூறியவர்தான், இன்று என் மனத்தைக் கீறியும் பார்த்தார். மனம் நினைவென்னும் பரணில் ஏறியது....

"என்னங்க உங்க கம்பெனியோட ஆண்டுவிழா விருந்துக்கு நான் இந்த ட்ரஸ்சை போட்டுக்கவா?"

"...." நளன் கைத்தொலைபேசிக்குள் மூழ்கியிருந்தார்.

"நான் கேக்கிறது காதுல விழுதா?"

"ம்....டின்னருக்கு நான் மட்டுந்தான் போறேன்" என் பார்வையைத் தவிர்த்தவர், பதிலை எதிர்பாராது கடந்து சென்றார்.

காரணம் புரியாதவள் "ஏன்?" என்றேன்.

"சதா தின்றதும், தூங்குறதுன்னும் இருந்தா? கூட அழைச்சிக்கிட்டுப் போற மாதிரியா இருக்கே!"

'நளனா? தன் கணவரா தன் உருவத்தைப்பத்திக் குத்திக் காட்டுறார்? அவமானத்தை மிகுவிக்கும் சொற்களில் அடிபட்டுப் போனேன். மற்றவர்கள் என்னைப்பத்தி பேசுறப்பல்லாம் ஆறுதல் வேண்டி அவரிடம் சொல்வேனே! இப்போ அவரே என் மனத்தைக் காயப்படுத்திட்டுப் போறாரே!' அன்பு ஆதிக்கம் செலுத்திய இடத்தில், இன்று ஊனப்பட்டுப்போய் நின்றது. என் உள்ளத்தில் மின்னலும் இடியுமாக, என் கண்ணீரைக் காணப் பொறுக்காது அன்று வானமும் என்னுடன் சேர்ந்துகொண்டது.

"ஏம்மா அழறீங்க?" பள்ளி முடிந்து வந்த மகிந்தன் அதிர்ச்சியோடு வினவினான்.

"அதெல்லாம் இல்லைடா" மகன் வந்ததைக்கூட அறியாமல் இருந்திருக்கிறேனே!

"என்னன்னு சொல்லுங்க" தாயின் கண்களில் கண்ணீரைக் கண்ட பதின்ம வயது மகனின் முகத்தில் பரிதவிப்பு பிரவாகமெடுத்தது.

"உடம்பைக் குறைக்க என்ன செய்யலாம் சொல்லு?"

"வாங்க ஜிம்முக்குப் போலாம்" சற்றும் யோசியாது சொன்னான். அது ரொம்ப நாட்களாக அவன் சொல்லி நான் விடாப்பிடியாக மறுக்கும் ஒன்றுதான்.

"ச்... வேணாண்டா..."

"அதெல்லாம் முடியாது, இப்பவே ஜிம்முக்குக் கிளம்புறோம்" என்றதோடு மட்டுமல்லாமல், உடனடியாகத் தன்னுடைய ஷூவைக் கொடுத்துப் போட்டுப் பார்க்கச் சொன்னான். 'பிராண்டட்' ஷூக்களின் மீது பித்தாக இருப்பவன்.

'இது இவனுக்குப் ரொம்பவும் பிடித்த 'அடிடாஸ்' ஷூவாச்சே! மகன்

*புது ஷூவுக்கு அடிபோடுறானோ?'*

*"சரியாதான் இருக்கும், போட்டுப் பாருங்கம்மா" என்றவனின் குரலில் பந்தயத்துக்கு தயார்ப்படுத்துபவன்போல துடிப்பு மிஞ்சி நின்றது. அவனது மிதமிஞ்சிய ஆர்வம் கிரியாஊக்கியாக, என் சின்னப் புத்தியை நொந்தபடி மகனது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தேன். வழியெங்கும் சாலைக்குக்காவல் காப்பதைப்போல நிற்கும் மரங்கள் மழையில் குளித்த புத்துணர்வில் சிலிர்த்துக்கொண்டிருந்தன.*

*'பிராடல் ஹை கம்யூனிட்டி ஹப்செராங்கூன் சென்ட்ரலில்' அமைந்துள்ளது. மனித வாழ்வின் ஆதியையும் அந்தத்தையும் தன்னுள் அடக்கியபடி வீற்றிருக்கும் நிலையத்தில்முதற்பகுதியில் குழந்தைப் பராமரிப்பு நிலையம், பாலர்பள்ளி எனத் துவங்கி இறுதியில் முதியோர் காப்பகத்தில் கொண்டு வந்து விட்டிருக்கும். இடையில் வாழ்வின் அத்தியாவசியமான மருத்துவமனையுடன், ஆரோக்கியத்தைப் பேண உதவும் உடற்பயிற்சி தளமும் அடக்கம்.*

*உடற்பயிற்சிக் கூடத்தில் நான் அடியெடுத்து வைக்க, கண்ட சித்திரம் விசித்திரமாய் எனக்குத் தோன்றியது. குளிர்சாதனம் தன் பணியைச் செவ்வனே புரிந்தபடியிருக்க, அங்கிருந்தவர்களோ வியர்வைக் குளியலில் இருந்தனர்!*

*"ட்ரட்மில்லில் முதலில் நடங்க" என்று என்னிடம் கூறிவிட்டு மகிந்தன் ஓடத் தொடங்கினான். பெருமழை பிடிக்க இருப்பதைப்போல என் மனத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன.*

*என்னைப் பார்த்து யாராவது சிரிக்கிறார்களா எனப் பார்வையை நாலாபுறமும் அனுப்ப, விழிகள் தோற்றன. பயிற்சியைத் தொடங்கிய எனக்கு ஐந்து நிமிடங்களுக்குள்ளாகத் தாறுமாறாக மூச்சு வாங்கியது. பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் பெண் பத்தே நிமிடங்களில் நூற்றைம்பது கலோரியை எரித்திருப்பது வியப்பாய் என்னுள் பரவியது. நான் எரித்த அளவுகளைப் பார்க்க ஐந்து நிமிடங்களில் பன்னிரண்டு கலோரி! 'யாராவது இதைப் பார்த்தால் மானம் போயிடுமே!' நினைத்தவாறு மகனிடம் பார்வையைக் கொண்டுபோக, வேர்க்க விறுவிறுக்க அவன் ஓடிக்கொண்டிருந்தான்.*

*மகதி... உனக்கு இது போதுமென கால்கள் கெஞ்சின. அதற்குள் இறங்கிவிட்டால் மற்றவர்களது கேலிப்பார்வைக்கு ஆளாக நேரிடுமோ எனக் கலக்கம் பிறந்தது. ஒருவழியாக பத்து நிமிடம் நடந்தவள் இறங்கினேன். சைக்கிளை மிதிக்கையிலும் அப்படியே. எனக்கு இதெல்லாம் ஒத்து வராதோ என பரிதாபமாய் மகனைப் பார்த்தேன். உடலோடு சட்டை ஒட்டிக்கொண்ட நிலையில்*

இருந்தான். அந்த வியர்வையைத் துடைக்க என் கைகள் பரபரக்க, அவனது உக்கிரமானப் பார்வை என்னை நடக்கச்சொல்லி கட்டளையிட்டது! என்னுள் உத்வேகம் பிறக்க தொடர்ந்த முயற்சியோ, சில நிமிடங்களில் நொண்டியடித்தது!

ஜிம்முக்கு எதிரே சீனர்கள் கூட்டமாக உடற்பயிற்சியை மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்குத்தான் தங்களது ஆரோக்கியத்தின்மீது எவ்வளவு அக்கறை? அப்படி இருப்பதால்தான் இயலாத நிலையிலும் முடங்கியிராது, துடிப்புடன் தங்களை வைத்துக்கொள்ள இதைப்போன்ற நடவடிக்கைகளை மேற்கொள் கின்றனர். சின்னச்சின்ன அசைவுகள் மூலம் பெரிய மாற்றங்களை நிகழ்த்த முடியுமென்ற அவர்களின் நம்பிக்கை என்னுள் பிரமிப்பை உண்டாக்கியது!

ஒரு மணி பொழுதை அந்தந்த இயந்திரங்களிலும் ஏறி, இறங்கி கடத்திய நான், எடை காட்டும் இயந்திரத்தை நாட, ஜிம்முக்கு வந்தபோது இருந்த எடை என்னைப் பார்த்து எள்ளி நகையாடியது.

“உடனேல்லாம் வித்தியாசம் தெரியாதும்மா, ஒரு வாரத்துல தெரியும் பாருங்க” மகனது நம்பிக்கை தொனிக்கும் வார்த்தைகள், கனவுகளை உலரவிடாது காக்கும் குடையாய் ஆனது. ஜிம்முக்குப் போகும் செய்தியை கணவரின் காதுகளில் போட்டேன். அவரது அலட்சியப் பார்வை என்னைக் கருக்கியது.

“ஜிம்முக்கெல்லாம் போகாதே!” என்னும் உடம்பின் கட்டளையுடனே விடியல் பிறக்கும். “காபியைக் குடிக்காதீங்கம்மா” மகன் எச்சரித்தது நினைவில் எழும்ப, என்னுடைய காலைப்பொழுதின் சொர்க்கம் காணாது போனது. ‘இவ்ளோ பெரிய உடம்பைக் குறைக்கணும்னு மகன் மெனக்கெடும்போது ஒரு காபியை இழக்க என்னால் முடியாதா?’ உள்ளம் ஒத்துழைக்க சமாதானமானேன்.

பள்ளி விடுமுறையில் பதினொரு மணிவரை தூக்கத்தை அனுபவிக்கும் மகன், காலையிலேயே “வாங்க போகலாம்” என்று வந்து நின்றான்.

பிள்ளையின் ஆர்வத்தைக் கலைக்க விருப்பமின்றி கிளம்பினேன். பழுப்புநிற வெயில் நாலாபுறமும் சிதறிக்கிடக்க மகிந்தன் முன்னே சென்றுகொண்டிருந்தான். ‘இவனது முயற்சிக்காகவாவது நான் இளைத்தே ஆக வேண்டும்’ என்று உள்ளம் திடமானது. உடற்பயிற்சிக் கூடத்தில் மூத்தோருக்கானப் பகுதி இருக்கிறது. சக்கரவண்டியின் உதவியுடன் அங்கே வரும் முதியவர்கள், உதவியாளர்களின் துணையோடு சின்னச்சின்ன அசைவுகளைக்கூட பெரும் பிரயத்தனத்துடன் செய்வதைக் காண்கையில், என் சிரமம் வெகுவாய்க் குறைந்தது.

அடுத்தடுத்து வந்த நாட்களில் உள்ளத்து உறுதியோடு கவனமாய் அக்கம் பக்கத்தில் பார்வையை அலையவிடாது நடக்கத் தொடங்கினேன். தொடர்ச்சியாகப் பத்து நிமிடங்கள் நடக்க முடிந்தது. கொஞ்சங் கொஞ்சமாக வேகத்தின் அளவை உயர்த்தினேன். அதீதக் களைப்பில் வேகவேகமாக வாங்கும் மூச்சின் உபயத்தால் நெற்றியில் ஒரு துளி வியர்வை பளிங்கைப்போலத் துளிர்த்தது. அது எவரெஸ்ட்டின் உச்சியை எனக்குக் காட்ட பரவசமடைந்தேன். வியர்க்கும் அளவுக்கு என்னால் உடற்பயிற்சி செய்ய முடிகிறதே! கவனமாக என் பார்வையை கலோரி வசமிருந்து தவிர்த்தேன்.

நடக்கிறேன் என்னும் நினைப்பே எனக்குக் களைப்பைத் தர, பார்வையை வெளியே அனுப்பினேன். குட்டிக் குட்டியாய் ஆரஞ்சு வண்ணப் பட்டாம்பூச்சிகள் ஆசிரியையின் மேற்பார்வையில் வலம் வந்தன. ஆசிரியை இருவராகக் கைகோர்த்து வரச்சொல்ல, ஒரு சிறுமி கைகோர்த்து வரும் சிறுவனின் கைகளை மேலே தூக்கி ஒரு சுழற்சியுடன் நடனமாடிச் சிரித்தாள். அக்காட்சியை ஆசிரியை ரசிக்கவில்லை என்பது அவரது முகத்தில் பிரதிபலித்தது. அவள் வகுப்பில் குடைச்சல் கொடுக்கும் மாணவியாக இருக்க வேண்டும். இந்த லயிப்பில் சில நிமிடங்கள் கரைந்தன.

தொடர்ந்து பதினைந்து நிமிடங்கள் நடந்து முடித்திருந்தேன். சைக்கிளை மிதிக்க அதிலும் முன்னேற்றத்தையே கண்டேன். கைசைக்கிளை, கைகள் சுற்றச் சுற்ற என்னுடைய பழைய ஜாக்கெட்டுகளெல்லாம் மனக்கண்ணில் நடனமாடின. அலமாரிக்கு அடியில் தஞ்சமடைந்துபோன சுடிதார்கள் அடித்துப் பிடித்துக்கொண்டு நான், நீயென முந்தி வந்தன. 'என்னால் நிச்சயம் முடியும்!' உள்ளத்தில் வைரம்போல உறுதி பிறந்தது. அன்றைய தினம் உடல் எடையைப் பார்க்க நூறு கிராம் காணாமல் போயிருந்தது!

ஒரு தீர்மானத்தை நாம் எடுத்துவிட்டால் அதை மற்றவர்களிடம் தெரிவித்துவிட வேண்டும். அப்போதுதான் நமக்காக இல்லாவிடினும் பிறர் கேள்வி கேட்பாங்களே அதுக்காகவாவது அந்த வேலையை முடிப்போமென வானொலியில் அறிவிப்பாளர்கள் சொன்னது நினைவுக்கு வந்தது. தோழிகளின் நமுட்டுச் சிரிப்பை மனத்திலிருந்து அழித்துவிட்டு, அவர்களது செவிகளில் உடற்பயிற்சிக்கூடம் போகும் செய்தியைப் போட்டு வைத்தேன்.

"ஏதும் சொல்லிக்கிற மாதிரி மாற்றம் தெரியலையே" என்றார் கணவர்.

ஜிம்முக்குள் அடியெடுத்து வைத்துவிட்டாலே 'சிக்ஸ் பேக்' கிடைத்துவிடுமென்ற நம்பிக்கையில் வந்து, சில நாட்களிலேயே

காணாமற்போன இளைஞர்களைப்போல அவரது பேச்சு இருந்தது. இதற்கு என்ன பதில் சொல்வது? முட்டை பொரியு முன் குஞ்சுகளை எண்ண முடியவில்லையே என்று அங்கலாய்த்தால் என்னாவது?

“தொடர்ந்து போனால்தான் நல்ல ரிசல்ட் தெரியும்பா” எனக்குப் பக்கபலமாய் நிற்கும் மகன் அவருக்குப் பதிலைச் சொன்னான். அவனது வார்த்தைகள் என் பார்வையில் போதிமரமாய்க் கிளை பரப்பி நின்றன!

இப்போதெல்லாம் மகிந்தனை எதிர்பார்க்காமல் கிளம்பிவிடுகிறேன். ஒவ்வொரு நாளும் இளைக்கும் எடை, பெருகும் உற்சாகமென நாட்கள் பறந்தன. சில சமயங்களில் இது போதுமே என மனம் அடம்பிடிக்கும். தோழிகளைப் பார்க்கையில் “ஜிம்முக்கெல்லாம் போய் அப்படியே ஐஸ்வர்யாராயைப்போல ஆகிடுவேன்னு பார்த்தால், பெரிய சைஸ் அண்டா மாதிரி வந்து நிக்குறே” என்று யாராவது இளக்காரமாகக் கேட்டுவிடுவார்களோ என்ற எண்ணம், மேலும் பயிற்சிகளைச் செய்யச் சொன்னது.

நீண்ட நாட்கள் சந்திக்காதவர்களைப் பார்க்கும்போது “உடம்புக்கு ஏதேனும்?” என்று தணிந்த குரலில் விசாரித்தனர். ‘வாழ்ந்தாலும் ஏசும்... தாழ்ந்தாலும் ஏசும்.....’ என்று சும்மாவா சொன்னாங்க?

உடற்பயிற்சியால் நித்தமும் பெருகும் வியர்வை என் நம்பிக்கை வளர ஆதாரமானது. முன்பு நாவை அடிமையாக்கிய உணவுகளைக் காணும்போது பழக்கத்தின் காரணமாய் மனம் கொஞ்சம் முரண்டு பண்ணும்தான். ‘இதைச் சாப்பிட்டுவிட்டு, உடம்பு அந்த அதிகமான கலோரியை எரிப்பதற்கு எத்தனை கிலோமீட்டர் ஓட வேண்டியிருக்கும்?’ எடைகாட்டும் இயந்திரம்நினைவுக்கு வந்து தலையைக்காட்டி சமாதானப்படுத்தியது.

“மகதி.... எங்க கம்பெனியின் பொன்விழா கொண்டாட்டத்திற்குப் போலாமா?” என் அருமை கணவர் ஐஸ்க்கிரீமுக்கு குளுமையை அளிக்க முயற்சிக்கிறார்.

வீட்டிலிருந்துகொண்டு கூசாமல் கும்பகர்ணசேவையைப் புரிந்து பெருத்துப் போவதைவிட ஏதாகிலும் செய்து ‘மகதின்னா என்னன்னு நினைச்சீங்க?’ என்று கணவரிடம் நிரூபிக்க வேண்டும்! உடம்பு டிரட்மில்லில் இயங்க, உள்ளம் லட்சியத்தை நோக்கி ஓடியது.

ஸ்டோர் ரூமுக்குள் நெடுங்காலமாய் முடங்கியிருந்த கணவரது உடற்பயிற்சி உபகரணங்கள் கூடத்தை அடைந்திருந்தன.

‘சட்டைக்குள் அடங்கமாட்டேனென்று அடம்பிடிப்பது இப்போது அவரது பிரச்சினையோ?’

●

# நகர்ப் பெருக்கத்தின் இடர்கள்

● ஆர்.பாலகிருஷ்ணன்

நகர்மயமாதல் வேகமாக நடந்து வரும் இந்நிலையில் பல்வேறு இடர்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக நகர் நோக்கி செல்வது தவிர்க்க இயலாதது ஏனெனில் நகரில் மட்டுமே மக்களுக்கான பணிகள் அதிகமாயுள்ளன அதே சமயம் கிராமப் புரங்கள் உலகெங்கயும் கைவிடப் பட்டு வருகின்றன. அரசின் திட்டங்கள் ஆகட்டும் அல்லது தனியார் நிறுவனங்களாகட்டும் எவையும் கிராமப்புறங்களை மனதில் கொள்வதில்லை. கிராமப் புறங்கள் அரசின் ஓட்டு வங்கிகளாகவே உள்ளன அங்கே சாதியம் என்னும் பொய்மை எளிதில் கட்டடப்பட்டு மக்கள் மெய்யான பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பப் படுகின்றனர்.

நகர பெருக்கம் என்பது இன்று அசுர வளர்ச்சி பெரும் நிலையினில் அது ஊரக எளிமை மனிதர் களின் குரல்வளையை நசுக்கியே நிகழ்கிறது. நகரங்கள் மக்களின் நடைபாதையினையும் நிழல் தரும் மரங்களையும் நீக்கி அது செல்வச் செழிப்பானவர்கள் மட்டுமே வாழ்வதற்குரிய இடமாக நிர்ணயம் செய்வதோடு அங்கு இரவில் உறங்கும் அப்பாவி விளிம்பு நிலை மனிதரின் வாழ்விற்கும் உத்தரவாதமில்லாது செய்கிறது.

நகரம் என்பது நவீன மனிதனின் இன்றியமையாக் கனவாகவும் அதுவே சிறந்த வாழ்நிலை பேணும் இடமாகவும் நுகர்வு மனோ நிலை உருவாக்கப் படுகிறது. இதனை முதலாளித்துவ ஊடகங்கள் நன்கு முன் மொழிகின்றன.

விளம்பரப் படமொன்றில் ஒரு குழந்தையுடன் வரும் பாதசாரியினைக் கண்டு ஒரு பைக் ஓட்டி உடனே நிறுத்துகிறான். பாதசாரிகள், குழந்தைகள்

போக்குவரத்திற்கு எவ்வளவு அபாயகரமானவர்களென்பது அத்திரைப் படம் மூலம் வெளியாகும் செய்தி. நடைபாதையில் நடந்து செல்பவர்களை வாகன ஓட்டிகள் ஏசுவது, பெண் உறுப்பைச் சொல்லித் திட்டுவது,வண்டி ஒடித்து மிரட்டுவது, அரசே நடைபாதையை நீக்கி பேருந்து கட்டண உயர்வை ஏற்படுத்துவது என நடப்பவர்கள் இவ்வுலகில் வாழவே கூடாது என்றே அதிகாரமும் நிறுவனங்களும் மிரட்டுகின்றன.

பெரு நகர வளர்ச்சி சார்ந்த பெரிய சாலைகள்,மோனோ ரயில்கள், மால்கள்,கேசினோக்கள் என தாராளவாதக் கோட்பாட்டினை முன் மொழியும் நகரங்கள் அதீத செலவுகளை மேற்கொள்ளும் பிற்போக்குவாத, சாதீய திருமணங்களையும் நிகழ்த்திடும் இடமாகவும் உள்ளன. ஆனால் நகர்ப் பெருக்கம் சரியாக திட்டமிடாத நிலையினில் மக்களை அந்நியப் படுத்துதல் கொடிய நிகழ்வாகவே இருக்கும்.ஊரக சாலை மேம்பாட்டுக்கு 100 நாள் வேலைத் திட்டம் மோடி அரசால் கைவிடப்பட்டு அகன்ற நாற்கர சாலை மேபாடுகள் என்ற பெயரில் நடக்கும் பெரு வீதி அந்நியமாதலை என்ன என்று சொல்வது? கிராம மக்களுக்கு சாலைகள் தேவை இல்லாதவையா?

மற்ற காரணிகளோடு வேலைகள் மற்றும் செழிப்பு ஆகியவற்றின் வாக்குறுதி மக்களை நகரங்களுக்கு இழுக்கிறது. உலக மக்கள்தொகையில் அரைவாசி ஏற்கனவே நகரங்களில் வசிக்கின்றனர், 2050 ஆம் ஆண்டில் உலகின் மூன்றில் ஒரு பகுதியினர் நகர்ப்புறங்களில் வாசிக்க நேரும் என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உற்பத்தி அதிகரிப்பு நகரங்களில் மக்கள் எண்ணிக்கை கூடுவதன் முதல் காரணம். உலக நகரங்கள் என்பவை சிறிய மக்கள் தொகையினை மனதில் கொண்டு உருவாக்கப் பட்டவை. இரண்டாம் உலக நகரங்களின் தன்மை தொழில் நுட்பக் கூட்டின் காரணமாக வேகமாக வளர்ச்சியடைந்த போதிலும் மூன்றாம் உலக நகரங்கள் பெரும்பாலும் முதலாளித்துவ உற்பத்தி கூர்மைப்பட்டதாலும், கிராம நகர அந்நியமாதல் அதிகரித்தாலும் விளைந்தன. நகர வாழ்க்கை என்பது ஒரு முழுப் பெருமை கொண்ட வாழ்வாக மாறிப் போயிற்று. நோம் சொம்ஸ்கி பெரு நகர வளர்ச்சியின் விளைவாக இன்னும் கூர்மை யடைந்த நிலையில் ராணுவ வளாகக் கட்டமைப்பு தோன்றும் எனும் சமூகவியலாளர் கருத்தினை ஒப்புக் கொள்வதோடு அவை மக்கள் வெவ்வேறு குழுக்களாக அன்னியப்படுத்தவும் கூடும் என்கிறார்.

நகர்ப்புறமயமாக்கல் விகிதம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது, இது வறுமையைக் குறைப்பதற்கான செயலில் முக்கியமாகும். நகர்ப்புறமயமாக்கப்பட்ட ஒரு நாடு என்பது அதிக

முதலீடுகள் மற்றும் வியாபாரங்கள் குவியும் இடம் என்று பொருள்படும், இது வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது, மேலும் அந்த கருத்தில் வளர்ச்சிக்கு மிகவும் பயனளிக்கும். ஆனால் அமர்த்தியா சென் இத்துடன் முரண்படுகிறார்.

வறுமைக் குறைப்பு என்றால் என்ன என்பதுதான் பிரச்சனை. வறுமை வருமான அளவுகளால் மட்டுமே அளவிடப்பட்டால், நகர்ப்புற மயமாக்கல் விகிதங்கள் வருமானத்தில் அதிகரிக்கும், இதனால் வறுமை குறைப்புக்கு மட்டுமே இது உதவுகிறது. இருப்பினும், அமர்த்தியா சென் மற்றும் பிற பொருளாதார வல்லுனர்களின் கருத்துப்படி, வறுமை பல்வகைப் பரிமாணம் கொண்டது வருமான ஏற்றத்தினை மட்டும் கொண்டு இதனை அளவிட முடியாது. இப் பரிமாணமானது குறைந்த வருமான அளவைக் குறிக்கவில்லை, மாறாக வாய்ப்புகளும் உரிமைகளும் இழப்பதையே அவை குறிப்பிடுகின்றன என்பார் அவர்.

உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்களில் 2050க்குள் நகரங்களில் 54 சதவிகிதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அறிவு சார் செயல்பாடுகளை அடக்கிய திறமையான நகரங்களின் பல நன்மைகள் நன்கு புரிந்து கொள்ளப்பட்டாலும், இந்த விரைவான, அடிக்கடி திட்டமிடப்படாத நகரமயமாக்கல் ஆழ்ந்த சமூக உறுதியற்ற தன்மை, முக்கிய உள் கட்டமைப்புகள், நீர்நிலை நெருக்கடிகள் மற்றும் நோய் பரவக்கூடிய பரவலுக்கான ஆபத்துகளைத் தருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நகர்ப்புறங்களில் இருந்து இந்த திட்டமிடாத மாற்றம் தொடர்ந்து இந்த அபாயங்களை மேலும் அதிகரிக்கலாம்.

இந்த அபாயங்களை எவ்வாறு திறம்பட நிர்வகிக்கச் செய்ய முடியும் என்பதெல்லாம், நகரங்கள் எவ்வாறு ஆளப்படுகின்றன என்பதன் மூலம் தீர்மானிக்கப்படும். மக்கள் தொகை, சொத்துகள், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றின் அதிகரித்த செறிவு என்பது, நகர அளவில் உள்ள அபாயங்கள், சமுதாயத்தை முன்னெப்போதையும் விட அதிகமாக பாதிக்கும்.

நகரமயமாக்கல் காரணமாக பணிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. வணிகங்கள் மற்றும் அரசாங்கங்கள் ஒரு வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகை தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான பணி உருவாக்க முடியாது. வேலையின்மை காரணமாக உடல் பாதுகாப்பு குறைந்து. வறுமை பரவுகிறது மற்றும் அனைத்திலும் முறையான திட்டம் இல்லையென்றால் ஆற்றல் சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, பொது போக்குவரத்து, கழிவு மேலாண்மை அனைத்தும் சிக்கலுக்குள்ளாகும் .

கடும் நுண்துகளிகள் மோட்டார் வாகன எரிபொருள் எரிப்பில் இருந்து வெளிவருகின்றன. புகைக்கரி, தூசி, மற்றும் புகைத் துகள்கள் சுகாதார அச்சுறுத்தல் ஏற்படுத்தும். இதனால் மூளை பாதிப்பு, கற்றல் குறைபாடுகள் மற்றும் குழந்தைகள் அகால மரணம் ஏற்படும். உலக சுகாதார அமைப்பின்படி துகள் செறிவு கன மீட்டருக்கு 90 மைக்ரோகிராம் வரைகுறைவாக இருக்க வேண்டும் .துகள் செறிவு 8 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் அளவில் மிகுந்து வருகிறது

நகர வளர்ச்சிபாய்வதால் விலங்கு மற்றும் தாவர வாழ்க்கைக்கு இடர் ஏற்படும். இயற்கை பல்வேறு நிலையில் பதிப்பு அடையும். சிறிய உயிரினம், ஒவ்வொன்றும் பூமியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. வாழ்க்கையில் இந்த மாறுபாடு இல்லாமல், மனிதர்கள் பாதிக்கப் படுகின்றனர். உயிர் பல்வகைமை, கலப்படத்தில் இருந்து நீர் மற்றும் மண் ஆகியவற்றைப் பாதுகாக்கிறது கடைகள் மற்றும் நகர் நிறுவனங்கள் ஊட்டச்சத்து மறுசுழற்சியை, உடைக்கிறது மற்றும் மாசுகள் காற்றில் கலந்து உறிஞ்சி பேரழிவு உருவாகும்.

நகரமயமாக்கல் குறைந்த உடல் உழைப்பு மற்றும் ஆரோக்கியமற்ற ஊட்டச்சத்துக்கு வழிவகுக்கும் 2020-ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பு இதய நோய், விகிதம் அதிகரித்துள்ளதையும் வளரும் நாடுகளில் இறப்பு 69 சதவீதமாக உள்ளதையும் கணக்கிட்டிருககிறது தொற்று அல்லாத நோய்கள்பரவுவதையும் அது கணித்துள்ளது. மற்றொரு நகரமயமாக்கல் தொடர்பான அச்சுறுத்தல் தொற்று நோய்கள். விமான பயணம் மூலம் ஒரு நாட்டில் இருந்து அடுத்தநாட்டிற்கு பாக்டீரியா மற்றும் வைரஸ்கள் பரவுவதை உறுதி செய்துள்ளது. கூடுதலாக, கிராமப்புற பகுதிகளில் இருந்து மக்கள் இடமாற்றம் புதிய நோய் தொற்றக் காரணம் ஆகும். நோய் எதிர்ப்பும் இதனால் குறையும்.

விரைவான நகரமயமாதல் குற்ற அதிகரிப்பை நிகழ்த்தும். வன்முறை களை அரசு குறைக்க இயலாத நிலை ஏற்படும். அரசு எந்திரம் சரியான நிர்வாக நடவடிக்கை எடுக்கவில்லையெனில் இது அதிகரிக்க வாய்ப்புண்டு; அதேநேரம் குற்றத்தடுப்பு ஊழியர் பற்றாக்குறை குற்றங்களை கட்டுப்படுத்துவதில் குறைபாடுகளை ஏற்படுத்தும்.

இது அச்சமூட்டச் சொல்வதல்ல வளர்ச்சி என்பது சம அளவில் இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்வது. கிராமங்கள் மற்றும் நகரங்கள் இடையில் மனிதர் நாம் வேறுபாடு கொள்ள வேண்டியதில்லை அவை இரண்டும் மனிதர் மற்றும் விலங்கு போன்ற பல்லுயிர் நன்கு வாழ இயற்கை உருவாக்கிய வெவ்வேறு நிலங்களாகும்.

கல்வி மற்றும் திறன் போதித்தலில் நகரமயமாதலால்அநேகம் மாற்றங்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. சரியாக திட்டமிடாத கல்வி, நகர் மயமாதல் இடர் களைய வலுவற்றதாகிறது. உதாரணமாக நகர் பெருக்கம் ஒன்றை மட்டும் மனதில் கொண்டு கட்டிடப் பொறியியல். கட்டிட கலை ஆகியன போதிக்கப்படுகின்றன. ஆனால் நகரக் கழிவு மேலாண்மை இத்துடன் செயலாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. நகரப் பெருக்கத்திற்கான கட்டிடவியல் கற்பதுடன் நகரின் திட்டவியலையும் பொறியாளர்கள் கணக்கில் கொள்ள வேண்டும். ஒரு நகரில் பெருங்கட்டிடங்கள் அவசியமா எவ்வளவு இடத்தினை மனிதர், விலங்கு மற்றும் தாவரங்களுக்கு என ஒதுக்க வேண்டும் என்ற திட்டத்தினை நகர வளர்ச்சிக் குழுமம் தொலை நோக்கோடு காண வேண்டும். எனவே நகரியம் என்னும் ஆய்வு பல்கலைக் கழகங்களில் நிகழ்த்தப் பெற்று அதன் மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே இத்தகு செயல் வடிவாக்கம் உருவாக வேண்டும்.

ஐ நா நகர்மயம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை என்ன :

நகர்ப்புற வளர்ச்சி நன்மைகளை உறுதிப்படுத்த அரசாங்கங்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மக்கள்தொகை பரவலான விநியோகத்தைத் திட்டமிட்டு நிர்வகிக்க பல்வேறுபட்ட கொள்கைகள் மற்றும் உள்நாட்டு இடம்பெயர்வு தேவை.

நகர்ப்புற வளர்ச்சியை இன்னும் சீரான முறையில் விநியோகம் செய்வதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள், அதிகப்படியான செலவினத்தைத் தவிர்க்கின்றன.

ஒரு நாட்டிற்குள்ளேயே ஒன்று அல்லது இரண்டு மிகப்பெரிய நகர்ப்புறங்களில் பெருமளவில் கூட்டம் கூடுகிறது அதனைச் சீரமைக்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டு முதல் சில நகரங்கள் மக்கள்தொகை சரிவைச் சந்தித்திருக்கின்றன, அவற்றில் பெரும்பாலானவை.

ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் குறைவான இனப்பெருக்க நாடுகளில் குடியேறிய அல்லது குறைந்து வரும் மக்களால் அமைந்துள்ளது.

உலகம் முழுவதும் ஐந்து நகர்ப்புறவாசிகளில் ஒருவர் ஒரு நடுத்தரமான ஐந்தாயிரம் மாத வருமானத்தில் வாழ்கிறார். அரசுகளின் மெய்யான சமூக ஆர்வம் மற்றும் மக்களின் சமநிலையாக்கமே இதற்கு சரியான தீர்வு.

●

சிறுகதை

# எல்லா பிணங்களும் சமம் அல்ல

● ராமன் முள்ளிப்பள்ளம்

"*சஹஸ்ர தீப அலங்காரம் பண்ணியிருந்தா, அவர் அந்த உத்சவ மூர்த்தி முன்னாடி நிண்டு தீபாராதனை காட்டினா, முன்னாடி பெருமாளப் பாத்துண்டு பின்னாடி ஒரு அடி வச்சார் அவ்வளவுதான் அப்படியே மல்லாக்க விழுந்தார், கீழ கல், அதுல தல பட்டுது, ரத்தம் பீறிட..., பிராம்மணன் ரத்தம் எல்லாம் அங்க சிதறிச்சு, அல்லோலப்பட்டது போங்கோ, பத்தடி உயரத்துல இருந்து விழுந்திருக்கார், இது என்னனு சொல்றது தலை எழுத்தா, தூங்கும் போது போவா, காலைல பார்த்தா பிராணன் இருக்காது, எல்லாரும் சொல்லுவா, செஞ்ச புண்ணியம் தூக்கத்துலயே போயிட்டார், ஆனா இத என்னன்னு சொல்ல, பகாவானுக்கு தீபாராதனை காட்டினவர் அப்படியே பின்னாடி வந்து விழுந்தா செத்தார்*"

"*ஆம்புலம்ஸுக்கு போன் பண்ணி வரவழைக்கல்லயா*"

"*அங்கயே ஒரு டாக்டர் இருந்தார், அவர் பாத்து சொன்னார், முடிஞ்சது வாழ்க்கை அப்படின்னார்*"

"*அப்புறம்*"

"*அப்புறம் என்ன, ஒரு வேன் வந்தது, பக்கத்திலயே இருந்த தெருவுல அவர் வீடு அங்க வச்சா, எம் எல் ஏ வந்தார், ஒரு கட்சினு இல்லாம எல்லா கட்சி ஆளுகளும் வந்தாங்க, முதலமைச்சர் அஞ்சு லட்சம் உதவி, அறிவிச்சார், ஒரு பொண்டாட்டி, ஒரு பொண்ணு*"

"*அர்ச்சகரே எல்லாருக்கும் ஒரு பொண்டாட்டியே*"

"*அதானே பாத்தேன் இன்னும் உங்க கிட்ட இருந்து நக்கல் வரலியேன்னு சந்தேகப்பட்டேன், இப்போ உதுத்துப்பிட்டீர் , ஒரு பிரம்மணன் பூஜை செய்யறச்சே மேல பத்தடி உயரத்து மேடையில இருந்து விழுந்து உயிர் விட்டிருக்கார், வீர மரணம்*"

“இப்ப என்ன தப்பா சொன்னேன்”

“செத்துப்போனவருக்கு ஒரு பொண்டாட்டி அப்படின்னு சொன்னீங்க”

“அவ்வளவுதான் எல்லாருக்கும் ஒரு பொண்டாட்டிதான் அப்படின்னே நான், அது நக்கலா”

“நான் எப்படி ஒருத்தர் உயிர் விட்டார்ன்னு சொல்லிட்டு இருக்கேன் நீங்க ஆராய்ச்சி செய்றீங்க பொண்டாட்டி ஒன்னுதான்னு”

“சரி மேல சொல்லுங்க”

“மேல வேற இடத்துல விசாரிங்க யார்ட்ட பேசினாலும் ஒரு நிருபர் கிட்ட பேசக்கூடாது”

நடந்தது என்னவோ அதிர்ச்சியானது, பெரிய விபத்து, பெருமாள் கோவில் உத்சவ மூர்த்தியை பெரிய மேடையில் வைத்து ஆயிரம் விளக்குகளை கொண்டு அலங்கரித்து வைத்திருந்தனர். மேடை சுமார் பத்து அல்லது பன்னிரண்டு அடி உயரம். அதில் ஏற ஒரு இரும்பு கிராதியில் ஆன படிக்கட்டுகள், மேடையும் சிறியது, மூன்றுக்கு நாலு, அதில் வீதி உலா வரும் செப்பு பெருமாள் கருடப் பறவையின் மீது. சுமார் ஆறு அர்ச்சகர்கள் அந்த மேடையில். அவர்கள் தங்களுக்குள்ளே ஏற்படுத்திக்கொண்ட தர்மத்தின் அடிப்படையில் ஒவ்வொருவரும் பத்து நிமிடம் பெரிய தாமிரத்தட்டில் சூடம் ஒளிர செய்து கருட வாகன சமேத பெருமாளுக்கு காட்டிவிட்டு கீழே வந்து பக்தர்களுக்கு காட்டினால் பக்தர்கள் சூடத்தை கண்களில் ஒற்றிக்கொண்டு தட்டில் அர்ச்சனை காசு போடுவார்கள், வீர மரணம் அடைந்த அர்ச்சகருக்கு அது இரண்டாம் முறை. கோவிலில் என்னவோ தட்டுக்காசை அரசு தடுத்து விட்டது. மேலும் ஒரு கரும் பலகையில் வெள்ளை எழுத்துக்களில் பெயிண்ட்டில் எழுதி வைத்து விட்டனர்,” காணிக்கைகளை உண்டியலில் மட்டும் போட வேண்டும்” இந்த ஏழை அர்ச்சகர்கள் என்ன செய்வார்கள்? இந்த மாதிரி வீதி உலா ஏற்பாடு செய்து பெரிய பெரிய அலங்காரங்கள் செய்து கடவுளை நடுத்தெருவுக்கு கொணர்ந்து தட்டுக்காசு வாங்குவதை தவிர வேறு வழி இல்லை. ஆகவே ஒப்பந்தப்படி எல்லாரும் ஒரு ரவுண்ட் சூடம் காட்டியது முடிந்தது, இரண்டாம் முறையில் இந்த விபத்து நடந்தது. ராமானுஜம் அர்ச்சகரின் வயது அறுபத்து ஐந்து, உயரம் ஆறு அடி, நல்ல சிவப்பு, அவர் நெத்தியில் போடும் செங்குத்து நாமம் கூட சமயத்தில் புலப்படாது. அவர் சிவப்பில் அந்த நாம கோடு சிவப்பு சரியாக தென்படுவதில்லை. அவர் எடை கூட எண்பது கிலோ இருந்திருக்க வேண்டும். அவர் விழுந்த கல்லில் கூட ஒரு கீறல்

விழுந்ததாய் சிலர் பேசிக்கொண்டனர். ஒரே மகள் பத்தாம் வகுப்பு படிக்கிறாள். ஆம் நாற்பத்து எட்டு வயதில்தான் இருபது வயது பெண்ணை காசியில் போய் பிடித்து வந்து கல்யாணம் செய்து கொண்டார். அந்த பெண் குழந்தை அழுவதை பார்க்க விரும்பாத கி சம்பத், மாலை இதழ் நிருபர் பெரிதும் விலகி வந்து வேறு ஒரு அர்ச்சகரிடம் நடந்த விபத்தை பற்றி விவரம் கேட்டான்.

"முதல்ல நீங்க எந்த பத்திரிக்கை அத சொல்லுங்கோ"

"மாலை கோவை", எங்க அலுவலகம் உக்கடத்துல"

"நான் அலுவலகம் முகவரி கேக்கல்ல யார் பத்திரிக்க , நல்லாப் போடுவேளா"

"மாலை கோவை நாள்தோறும் மாலை அஞ்சு மணிக்கு வரும், நம்பகமான நல்ல செய்திகளை தரும்"

"உங்க கேள்வி என்ன ?"

"கேள்வி, நேத்து மாலை அந்த அர்ச்சகர் விழுந்திருக்கார், இப்ப அடுத்த நாள் காலை இன்னும் ஏ எடுக்கல்ல"

"முதல்ல கலிபோர்னியாவில இருக்குற தம்பிக்கு வெயிட் பண்ணினா, அவர் சேதி கேட்டு ஸ்பெசல் ஃப்லைட்ல வந்துட்டார், ஆனா நேத்து இன்னொரு பிணம் விழுந்துருக்கு, அது போற வழியில, அந்த அசிங்கம்.. முன்னால அர்ச்சகர் உடல எப்படி எடுத்துப் போறது,"

கி சம்பத்தின் கைபேசி ஒலித்தது,

அவன் அதை அழுத்த ஒரு பெரும் கூக்குரல் வெடித்தது

"எங்க இருக்க,"

"சார் இங்க சிங்கா நல்லூர் உள்ள இருக்குற அக்ரஹாரத்துல""

"அங்க என்ன வேல"

"உச்சியில இருந்து விழுந்து இறந்த அர்ச்சகர் சாவ கவர் பண்றேன்

"அடேய் லூஸ், நாங்க எதுக்கு அனுப்பினோம் நீ என்ன பண்ற"'

"சார் இங்க சிங்கா நல்லூர் வந்தேன், இதுதான் எல்லார் கவனம் பெற்ற பரபரப்பான சூடான சாவா இருந்தது அதனால இத கவர் பண்ண ஆரம்புச்சேன்"

"அடேய் முட்டாள் சம்பத் அதவிட அதிகம் பரபரப்பான சாவு அங்க

விழுந்துருக்கு. அத நீ கண்டு பிடிச்சு ரிபோர்ட் கொடுக்கல்லய்னா இங்க வராத நேரா  வீட்டுக்கே போயிரு”

“பெரியவரே, இப்ப சொன்னீங்களே இன்னொரு பிணம் அது எங்க கிடக்கு”

“அப்ப நீங்க வந்தது இன்னொரு பிணம் பார்க்க... இந்த கலி காலத்துல ஒரு பிராம்மண பிணத்துக்கு மரியாத இல்லாம போச்சு” அவர் சொன்னத கேட்டவாறு கி சம்பத் திருச்சி மெயின் ரோடு நோக்கி தன் பைக்கை செலுத்தினான்.

அக்ரஹாரம் முடிந்து பிரதான  சாலை  துவக்கம், அது பழைய பிரதான சாலை  , சற்று தள்ளி இன்னொரு பிரதான  சாலை  அது திருச்சி சாலை, இரண்டு சாலைக்கும் நடுவே ஒரு தடுப்பு, மூன்று அடி உயரத்தில் பிரிக்கும் சுவர், நடு ரோட்டில் ஐந்து பேர் எதையோ சுற்றி வளைத்து குனிந்து பார்த்துக் கொண்டிருந்தனர். ஒருவன் கையில் இரட்டை மூங்கில் தப்பை, அது வளைந்து வீதியை  மறித்து வளைந்து தொங்கியது, இன்னொரு நுனி ஒரு பெரிய ஓட்டையினுள் சென்றது;  கி சம்பத் புரிந்து கொண்டான். பாதாள சாக்கடையை சுத்தப்படுத்துகின்றனர். எங்கேயாவது உள்ளே அடைபட்டிருக்கும். ஆனால் தான் வந்த வேலை.? சுற்றிலும் பார்த்தான், அவன் அருகிலேயே இரு போலீஸ்காரர்கள் .

“'வணக்கம் சார் நான் மாலை கோவை நிருபர். இங்க ஏதாவது வேற ஆக்சிடண்ட் ஆயிருக்கா, நான் கேக்குறது பூசாரி மேல இருந்து விழுந்து செத்தது பத்தி இல்ல.. அத விட்டு இன்னொன்னு ஏதாவது...” அவன் படு தயக்கத்துடன் கேட்டான்.

போலீஸ் அவனை இளக்காரமாக பார்த்து கையை தூக்கி முறித்து பின் நேராக நீட்டினார். கி சம்பத் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. பைக் நுயுட்ரலை முதல் கியருக்கு மாற்றி சாலை கடந்து இரு சாலைகளை பிரித்த தடுப்பு சுவர் அருகே நிறுத்தினான். திரும்பி பார்த்தான். அதே ஐந்து பேர் இல்லை இல்லை மூன்று பேர் அந்த பாதாள சாக்கடை ஓட்டை சுற்றி உட்கார்ந்த்து இருக்க ஒருவன் ஓட்டைக்குள் தலை விட்டு ஏதோ கத்தினான். அவர்கள் பிழைப்பை பார்த்து கி.சம்பத் நொந்து கொண்டான். சே என்ன ஒரு பிழைப்பு, கம்யூட்டர் காலத்தில் இந்த பாதாள சாக்கடையினுள் செல்ல ஒரு எந்திரனை கண்டு பிடிக்கக் கூடாதா ? அவன் கை பேசி ஒலித்தது. எடுத்தான், அழுத்தினான்.

“சம்பத் வீட்டுக்கு போறயா இங்க வரயா.. என்ன ஆச்சு கண்டு பிடிச்சிட்டியா ?”'

“சார் இன்னும் அரை மணி நேரம் கொடுங்க.. வேற என்ன விபத்து கண்டு பிடிச்சிடறேன்”

“இல்ல நீ கண்டு பிடிக்க முடியாது நாங்களே உனக்கு அடி அடிக்கு சொல்லி கொடுக்கணும், அங்க மெயின் ரோட்டுல பாதாள சாக்கடையில இறங்கின துப்புறவுத் தொழிலாளி உள்ளயே செத்துட்டான் அத பாத்து ஒரு ரிப்போர்ட் கோடு”

“சார் எங்கனு சொல்லுங்க நான் பாத்து நல்லா கவர் பண்றேன்”

“டேய் நீ சிங்கா நல்லூர்ல இருக்க நாங்க இங்க ஆஃபீஸ்ல நீதான் கண்டு பிடிக்கனும், முடியாட்டி வீட்டுக்கு போயிடு உன்ன மாதிரி நிருபர் தேவையில்ல” கைபேசி துண்டிப்பானது.

அவன் முன்னால் அந்த மூன்று பேர், இல்லை இல்லை அங்கே யாரும் இல்லை, ஓட்டை மூடப்பட்டு இருந்தது. மெதுவாய் இரு புறம் பார்த்தவாறு சாலை கடந்து நடு வீதிர் ஓட்டை அருகே சென்றான். குனிந்து பார்த்தான். ஏதோ கெட்ட வாடை, படு மோசமான துர் நாற்றம். அவனால் தாங்க முடியவில்லை. வேகமாக ஒரு சக்கர தள்ளு தொட்டியை தள்ளிக் கொண்டு அந்த மூவர் வந்தனர். அதன் அகலமான குப்பை தொட்டியில் ஒரு கனமான சாக்கு மிதி விரிப்பு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. படு கனமானது. பார்த்தாலே தெரியும். நேரே அந்த இரு சக்கர குப்பை தொட்டி அவன் அருகே வந்து நின்றது. கி சம்பத் வேகமாக விலகி நின்றான். அதே மூவர். ஓட்டை அருகே அவன் சற்று முன் பார்த்த மூவர். மூவரும் சேர்ந்து அந்த விரிப்பை தூக்க முடியாமல் தூக்கினர். அப்போது இன்னும் இருவர், முதலில் பார்த்த ஐவரில் இருவர்.

“வாங்கடா வந்து பிடிங்கடா இது ரொம்ப கனம்” மூவரில் ஒருவன் கூறினான்

“இருக்காதா பின்ன இது மணமேடை முன்னால போடுறது, பையன் வீட்டு பொண்ணு வீட்டு பெரும் புள்ளிக உக்கார போடுறது, இப்ப அரை மணியில திருப்பி கொண்டு வந்துடறோம் சாமின்னு சொல்லி வர நேரமாச்சு” பின்னே வந்த இருவரில் ஒருவன் சொன்னான். பின் ஐவரும் தூக்கி அந்த விரிப்பை விரித்து அந்த சாலையில் பரப்பினர். இப்போது ஓட்டையும் அதன் மூடியும்தென்படவில்லை. சக்கர தள்ளு வண்டியை இரு சாலையின் நடுவில் இருந்த தடுப்பு சுவர் அருகே தள்ளி நிறுத்தினர். ஐவரும் அசதியுடன் முதுகை சுவரில் சாய்த்து களைப்புடன் அமர்ந்தனர். அப்போதுதான் ஒரு வீறிட்ட பெண் குரல், அதுவும் ஒரு குழந்தை. சுமார் பத்து வயசு. பரட்டை தலை, பெரிதாய் கத்தல்

போட்டது. தடுப்பு சுவர் அருகே அமர்ந்து இருந்த குழந்தை எழுந்து ஐவரிடம் வந்தது. அதில் ஒருவன் கன்னத்தில் ஒரு அறை விட்டு கூவியது

“லோபல வேசி மூசினாவே எப்புடு பயட்ட தெஸ்தா நா அப்பன”

கி சம்பத் தன் ரத்தம் உறைபடுவதை உணர்ந்தான். அவனும் ஒரு வந்தேறியே. அந்தப் பெண் குழந்தை பேசியதை புரிந்து கொண்டான். அவள் சொன்னது இதுதான்.

“உள்ள போட்டு மூடியிருக்கயே ஏ அப்பன எப்ப வெளிய கொண்டு வருவ”

கி சம்பத் கால்கள் ஆடின. அமர்ந்திருந்த ஒருவன் அருகே சென்று அவன் சட்டை காலரை பிடித்து அவனை அப்படியே தூக்கினான். எழுந்தவன் வாயிலிருந்து டாஸ்மாக் மது வாடை, அவனால் தாங்க முடியவில்லை. அவனை அப்படியே விட்டான். தூக்கப்பட்டவன் விழுந்தான். துக்கப்பட்டவன் கி சம்பத். கீழே விழுந்தவன் அலட்டிக்கொள்ளாமல் பேசினான்

“சார் இந்த வாடையே தாங்க முடியலயே நாங்க பாதாளத்துக்கு உள்ள போயி சுத்தம் பண்றோம், அங்கயே சாகுறோம் இதுதாண்டா வாழ்க்கை பெருமாள் உள்ள கிடக்கான், நாங்க மேல தண்ணி போட்டு பேசுறோம் நீ யாரு சார்”

“சரி பாதாள சாக்கடையில விழுந்த ஆள் எங்க”

“அவரு ஏ அப்பா” அழுது கொண்டே சொன்னாள் அப்பெண் குழந்தை.

“இப்ப அவரு எங்க”

ஐவர் பேசுவதாயில்லை. முதுகை பிரிக்கும் சுவரில் சாய்த்து போதையை தூக்கத்தை அனுபவித்தனர்.

“அய்யா அப்பா நேத்து பாதாள சாக்கடையில அடப்பு எடுக்கும்போது செத்துட்டார். அந்தப் பூசாரி செத்தாரே அப்பதான் அப்பா செத்தார்., ஆனா உடல சாக்கட தண்ணி தள்ளிட்டு போயிருச்சு, ராத்திரி பூரா தேடினாங்க...”

அவளால் பேச முடியவில்லை தேம்பினாள்.

கி சம்பத் அவள் அருகே நெருங்கி அவள் தோளை தொட்டான், கேட்டான்

“சொப்பு ஏமி ஜரிகிந்தி” வந்தேறி மொழியிலேயே கேட்டான்

அவள் சற்று அழுகை நிறுத்தி சொன்னாள்

“அப்புறம் அப்பா கிடச்சிட்டார் ஆனா இந்த இடம் அந்த செத்துப் போன பூசாரிய தூக்கிட்டு போற வழியாச்சே அதனால அந்தப் பிணம் போற வரை இந்தப் பிணத்த மூடி வைக்க சொன்னாங்க”

“எதுக்கு இந்த கல்யாண மண்டப விரிப்பு”

ஒருவன் விழித்தான். ஐவரில் ஒருவன். பெரும் குரலில் சொன்னான்.

“டேய் சார் நீ யாரு எங்களுக்கு எல்லா வேலைக்கும் காசு கிடைக்கும். மூடி மட்டும் போட்டு மூடினா பத்தாது, அதனால் ஒட்டை மேல கல்யாண வீட்டு கம்பளம், வாடை வராது பாரு, பூசாரி பிணம் போனதும் திருப்பி கொடுத்துருவோமில்ல, போடா நீ போடா”

கி சம்பத் தொலைவில் வரும் அமைதி ஊர்வலத்தைப் பார்த்தான். எல்லா சமயத்தினர், எல்லா சாதியினர், எல்லா அரசியல் பிரமுகர்கள், நான்கு போலீஸ் உடன் வர முன்னே வந்தது ஒரு பாடை. அதில் கோவில் அர்ச்சகரின் ஆத்மா அற்ற உடல்..

கி சம்பத் மனதிற்குள் பொருமினான். அவன் எந்த மொழியில் இதை கவர் பண்ணுவான். முழுதும் உறைந்திருந்தது அவன் மூளை, கைகள் கால்கள் ஏன் விரல்களும் கூட நடுங்கின. எப்படி எழுதுவான். என்ன எழுதுவான்.

அடுத்த நாள் பிரபல ஆங்கில மற்றும் செந்தமிழ் ஏடுகள் கோவில் பூசாரியின் படம் போட்டு அவர் சாவை குறித்து புகழ்ச்சியாய் எழுதின. ஆனால் முந்திய நாள் மாலை வந்த”மாலை கோவை” எந்த செய்தியும் வெளியிடவில்லை. ஏனெனில் கி சம்பத் எழுதியதை அவன் பத்திரிக்கை ஏற்கவில்லை. ஏனெனில் அவன் பெருமாளை பற்றியும் அவன் சாவை பற்றியும் உருக்கமாக எழுதியிருந்தான். அதில் சுவாரஸ்யம் இருக்கவில்லை. இப்போதெல்லாம் தமிழ் மக்கள் நகைச் சுவையே அதிகம் விரும்புகின்றனர். சரி எந்தப் பெருமாள் எந்த சாவு என கேட்கிறீர்களா. அதுதான் பெருமாள். பாதாள சாக்கடையினுள் பணி செய்து இறந்தவன். கடவுள் பெருமாள் அல்ல.

பெருமாள் பிணத்தை பெருமாள் பூசாரியின் பிணம் போன பிறகு பாதாள சாக்கடையிலிருந்து எடுத்து விட்டார்கள். எல்லா பிணங்களும் சமம் அல்ல.

●

# C/o காஞ்சிரபள்ளம்

● சுப்ரபாரதிமணியன்

ஒரு தெலுங்கு திரைப்படம்

பி நரசிம்மராவுக்குப் பிறகு தெலுங்கு திரைப்பட உலகில் ஒரு பெரிய நீண்ட இடைவெளி இருப்பதாக நினைக்கிறேன். அவரின் மாபூமி, மட்டி மனுஷலு., ரங்குலகலா போன்ற படங்கள் 90களில் இந்தியத் திரைப் படத்திற்கு தெலுங்கிலிந்து சில நல்ல படங்களாக அமைந்தன. சில நல்ல ஆவணப்படங்களையும் எடுத்திருக்கிறார். செகந்திராபாத்தில் இருந்த போது அவரைப் பல முறை சந்தித்திருக்கிறேன். அவ்வப்போது விஸ்வநாத் என்ற இயக்குனர் தரப்பில் இருந்து சில வெகுஜனப் படங்கள் ரசிக்கக் கூடியதாக இருந்தன. ஆனால் இந்தியத் திரைப்பட விழாக் களிலும் உலகத் திரைப்பட விழாக்களிலும் தெலுங்குப் பிரிவில் இருந்து சரியான படங்கள் இல்லாததை நான் கடந்த 15 ஆண்டுகளாக கண்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு நான் பார்த்த படம் c/o காஞ்சிரபளம். இயக்குனர் மகா வெங்கடேஷ். இந்த படம் என்னை மிகவும் பாதித்தது. தொழில்முறை நடிகர்கள் எவரும் இல்லாமல் ஒரு சிறு பகுதியை சார்ந்த சாதாரண மக்களைக் கொண்டு எடுக்கப்பட்டு இருந்த படம். சாதாரண கதை சாதாரண மனிதர்கள். சாதாரண நடிகர்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு படம். ஒரு உச்சபட்ச கலை சாதனையாக இருப்பதை தெரிந்து கொண்டேன் வழக்கம்போல் காதல் கதை தான். ராஜி என்கிற 49 வயதான ஒருவன் அலுவலக கடைநிலை ஊழியராக வேலை செய்கிறவன் பிரம்மச்சாரியாக இருக்கிறான் அவனுடைய தினசரி வாழ்க்கையில் நடைப்பழக்கம். ஏதாவது தேநீர் கடைக்குச் சென்று தேநீர் பருகுவது, அலுவலகம் செல்வது, அலுவலகத்தில் சாதாரண வேலைகள் பிறகு மாலையில் திரும்பி அந்த தெருவில் உள்ள சிலருடன் உட்கார்ந்து மது அருந்துவது,இதுதான் அவனின் தினசரி வாழ்க்கை. இந்த வாழ்க்கை அம்சங்களில் இருந்து ஒரு திருப்பத்தைத் தருவதற்கு ஒரு 42 வயது பெண் ராதா வருகிறாள் அந்த அலுவலகத்திற்கு புதிதாக வேலைக்கு செல்கிறாள். அந்த ஒடியப் பெண்ணுக்கு இந்தி தெரியும். தெலுங்கு தெரியாது. இந்த படம் விசாகப்பட்டினத்தில் ஒரு சிறு பகுதியை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அலுவலகத்தில் பலரும் தெலுங்கு பேசுகிறார்கள். இந்த ஒடிய பெண் ஹிந்தியில் பேசிப் பழகுகிறாள். இந்த சூழலில் மதிய நேரத்தில் அந்த அலுவலத்தில் இருக்கும் ஆறு ஏழு அலுவலர்கள் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடும் போது ராஜி தனியாக உட்கார்ந்து சாப்பிடுவது வழக்கம். அந்த பெண் வந்த பின் அவள் ராஜியை எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடும் இடத்திற்கு அழைக்கிறாள். மற்றவர்களும் முகம் சுழித்தாலும்

அதைத் தடுப்பதில்லை. பிறகு மெல்ல அவளுடைய கதையைக் கேட்கிற போது அவள் விதவை அவளுக்கு 20 வயதில் ஒரு பெண் இருக்கிறாள் என்ற தகவல் கிடைக்கிறது .அந்தசிறு பெண் அவருடைய சகோதரனுடைய வீட்டில் வாழ்கிறார். தகவல் பரிமாற்றங்கள் தினசரி வாழ்க்கை என்று வருகிறபோது ராஜிவுக்கு ராதாவின் மேல் ஒரு பிடிப்பு ஏற்படுகிறது. சர்க்கரை நோயால் அவதிப்படும் ராதாவை தினசரி நடைப்பயிற்சி,யோகா பயிற்சிக்கு கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்கிறான். இருவருக்கும் நட்பு வளர்கிறபோது அவள் தெலுங்கு கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறாள். ராஜி உதவுகிறான். பக்கத்தில் இருக்கும் ஒரு மலைக் கோயிலுக்கு செல்ல விரும்புகிறாள். பாதயாத்திரை செல்வது நல்லது என்று அவன் கீழ்ப்பகுதியிலிருந்து மேல் பகுதிக்கு அவளைக் கூட்டிச் செல்கிறான். சர்க்கரை வியாதி மற்றும் உடல் உபாதைகளால் அவள் படும் சிரமத்தை உணர்கிறான் அவள் கடவுளை கும்பிட்டாலும் ராஜி கும்பிடுவதில்லை. நான் மனிதர்களையே பெரும்பாலும் மதிக்கிறவன் வணங்குகிறவன் என்று சொல்கிறான். பிறகு இருவருக்கும் ஒரு வகையில் காதல் அரும்புகிறது அப்போது அந்த பெண் ஏன் நீதிருமணம் செய்யக்கூடாது என்று கேட்கும் போது அவன் கொஞ்சம் தடுமாறுகிறான்.. இருவரும் தங்களுடைய அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ராதா அவர்களின் மகளிடம் இதைச் சொல்கிற போது அவள் இந்த வயதில் உனக்கு என்ன இப்படி ஒரு ஆசை வந்த்து என்று திட்டுகிறாள். ஆனால் அவள் ராஜிவின் தொலைபேசி எண்ணை வாங்கி அவருடன் பேசி அவருடைய மனதைப் புரிந்து கொண்டு அம்மாவின் விருப்பமும் சரிதான் என்று உணர்கிறாள். ஆனால் ராதாவின் சகோதரர் தடையாக இருக்கிறார். ராதாவை அடிக்கிறார் ஒரு அறையில் பூட்டி வைக்கிறார். ராஜிவுக்கு தகவல் சென்று அவர் வருகிறபோது ராதா தன்னுடைய மகளின் உதவியால் அந்த வீட்டிலிருந்து தப்பிக்கிறாள். தப்பித்து செல்லும் இடத்தில் ராதாவின் சகோதரர் சிலரை கூட்டிவந்து அவர்களை அடிக்கிறார். ஒரு தொடர் வண்டிச் சாலை. அந்த தொடர் வண்டிச் சாலையின் அந்தப்புறம் காஞ்சிரபளத்தில் உயர்ந்த சாதியினர் வசிக்கக்கூடிய குடியிருப்புகள் இருக்கிறன. இந்தப் பக்கம் ராஜி போன்ற சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்றன. குடியிருப்புகள் இருக்கின்றன. அந்த தொடர்வண்டிப் பாதை அருகில் ராதாவையும் ராஜிவையும் பிடித்து அடிக்கிறார்கள். அப்போது ஒரு தொடர் வண்டி கடந்து போகிறது. அதன் பின்னால் அந்தப் பகுதியில் சாதாரண மக்கள் எல்லாம் ஒன்று திரண்டு ராஜிவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நிற்கிறார்கள். திருமணம் செய்து கொள்கிறான். இந்த திருமணத்தோடு இந்த படம் முடிகிறது. ஆனால் ராதா அவனிடம் கேட்கிறாள் ஏன் இவ்வளவு ஆண்டுகள் நீ திருமணம் செய்துகொள்ளவில்லை. ஆண்கள் மீது மோகம் கொண்ட மனிதன் “கே” என்று கூட அந்த கிராமத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்களே என்று கேட்கிறபோது அவன் தனக்கு

ஏற்பட்ட காதலைச் சொல்கிறான். இந்தப் படம் நான்கு தளங்களில் வெவ்வேறு நபர்களின் கதையையும் கொண்டிருக்கிறது. நான்கு தளங்களில் ஆணும் பெண்ணும் வேறு வயதினர். வெவ்வேறு சாதி மதம் சார்ந்தவர்கள். அதில் ஒருவர் ஒரு சாதாரண மதுக் கடையில் வேலை செய்யும் மனிதர். தினந்தோறும் இரவில் ஒரு விபச்சார பெண் அங்கு வந்து ஒரு மது பாட்டிலை வாங்குவதன் மூலம் அவனுக்கும் அவளுக்கும் இடையில் ஒரு நட்பு ஏற்படுகிறது. அவளைப் பற்றி தெரிந்து கொள்கிறான் அவனை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் அவள் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த பெண் முஸ்லிம் சமூகத்தை சார்ந்தவர்கள் அவளின் விபச்சாரம் நடவடிக்கை மற்றும் அவளின் தாய் எய்ட்ஸ் நோயால் இறந்து போனது போன்றவற்றால் அவளின் நடவடிக்கைகளைக் கண்டிக்கிறார்கள். மதுக் கடையில் வேலை செய்யும் அவனும் அந்த முஸ்லிம் பெண்ணும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுக்கிறார்கள் திருமண நாளன்று அவன் காத்திருக்கிறான். முஸ்லிம் பெண் வரவில்லை அவளுடைய அறைக்குச் சென்று பார்த்த போது அவள் இறந்து கிடக்கிறாள். எப்படி இறந்தாள் என்பது தெரியவில்லை. இது ஒரு கதை. இன்னொரு கதை. ஒரு சிறுவன் தன் பள்ளியில் உள்ள ஒரு சிறுமி மீது தீராத அன்பு வைத்திருக்கிறான். நன்கு பாடக்கூடிய அவளுக்கு பாடுவதற்காக அவன் மரோசரித்திரா படத்தின் பாடல் புத்தகத்தை வாங்கித் தருகிறான். ஆசிரியையும் கூட ஆதரவு தருகிறாள். அவள் நன்கு பயிற்சி செய்து பள்ளி விழா ஒன்றில் பாடுகிறார். ஆனால் அந்த சிறுமியின் தந்தை அதைக் கண்டித்து அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார். டெல்லிக்கு அனுப்பி அவளை வேறு பள்ளிக்கு மாற்றி விடுகிறார். இந்த சிறுவன் அவளைத் தேடித் திரும்ப திரும்ப அவளது வீட்டுக்கு செல்கிறான். இறுதியில் அவள் வேறு ஊருக்கு சென்று விட்டது தெரிகிறது இந்த சிறுவனின் அப்பா ஒரு சிற்பி கடவுளின் உருவங்களை செய்கிற வேலை செய்கிறவர். அவர் தான் வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு இடத்தில் வருமானம் போதவில்லை தன் முதலாளி நிறைய சம்பாதிக்கிறார். தனக்கு சரியான ஊதியம் தருவது இல்லை என்பதற்காக எதிர்த்து கேட்கிறார். திக்குவாய் உள்ளவர். அவர் ஏதாவது உணர்ச்சிவசப்படுகிற போதும் பேசுகிறபோதும் தாளில் எழுதி தான் காண்பிப்பார். முதலாளியிடம் முரண்பட்டு அடிவாங்கி வெளியே வருகிறார் தன்னிடம் உள்ள நகைகளை எல்லாம், விற்று நிலத்தை அடமானம் வைத்து கொஞ்சம் காசு சேர்த்து தன் தொழிலைத் தானே செய்து கொள்ள முடிவெடுக்கிறார், அப்போது வருகிற விநாயகர் சதுர்த்தியின்போது ஒரு 30 அடி உயரமுள்ள ஒரு விநாயகர் சிலை செய்ய அவருக்கு வேலை தரப்படுகிறது. அந்த ஊர் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து அதை செய்யச் சொல்கிறார்கள் அவை அவர் செய்ய ஆரம்பிக் கிறார். இந்த சிறுவன் அப்பா 30 அடி உயரமுள்ள சிலையை செய்ய ஆரம்பிக்கும் போது தொடக்கவிழாவில்

வைத்து கும்பிடும் விநாயகர் படத்திற்கு வணக்கம் செய்கிறான். கும்பிடுகிறான். அந்த சிறுமி உடனான நட்பை வளர்க்க விநாயகர் உதவ வேண்டும் என்று வேண்டு கிறான். அந்த சிறுமி வெளியூருக்கு மாற்றப்பட்டதால் விநாயகரிடம் மீண்டும் மன்றாடுகிறான் .விநாயகர் இப்போது முப்பதடி சிலையாக நிற்கிறார். வரும் திருவிழாவிற்கு அந்த ஊர் மக்களின் சார்பாக அவர்தான் கொலுவில் வைக்கப்பட்ட உள்ளார். அந்த விநாயகர் மேல் குற்றஞ்சாட்டுகிறான் சிறுவன். நான் உன்னை நம்பி இருந்தேன் என் நட்பை நீ மதிக்கவில்லை என்று இரவில் கற்களால் அந்த விநாயகர் சிலையின் சில பகுதிகளை சேதப்கடுத்தி விடுகிறான். அந்த கிராமத்துக் காரர்கள் வந்து அந்த சிலையை திருவிழாவிற்கு எடுத்துச் செல்ல எத்தனிக்கும் போது சிலை சேதம் அடைந்து இருப்பது தெரிகிறது. சிலை சேதம் அடைந்திருப்பதை சீர்திருத்த முயற்சி செய்கிறார் சிற்பி. ஆனால் இயல்வதில்லை உள்ளூர்காரர்கள் கோபப்படுகிறார்கள். கடைசியில் ஒரு இரவில் அந்த சிலைக்கு முன்னால் உள்ள ஒரு மரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொள்கிறார். இது ஒரு கதை.

இன்னொரு கதையில் வருகிற ஒரு பிராமணப் பெண் வழியில் அடித்துப் போடுகிற ஒருவனைத் தட்டிக் கேட்கிறாள். பிறகு தன் தோழி ஒருத்திக்கு நேர்கிற சிறுசிரமங்களுக்காக அந்த ஊரில் உடற்பயிற்சிசாலை வைத்து நடத்தி வருபவரிடம் சந்தித்து உதவி கேட்கிறாள். அவரும் உதவுகிறாள். அந்த தோழியை சில மனிதர்கள் அடித்து பயமுறுத்த அந்த உடற்பயிற்சி நிலையத்துக்காரர் அனுப்பும் அந்த ஆள் முன்பு அந்தப் பெண்ணால் திட்டி அடிபட்டவர். பக்கத்தில் உள்ள வீடுகள் பக்கத்து உறவினர்களால் தன்னைப் பின் தொடர்வதற்காக அடிக்கப்பட்டவர். ஆனால் உடற்பயிற்சிகாரர் சமாதானம் செய்து வைத்து இப்போது அந்தப் பெண்ணுக்கு தேவையான உதவிகளைச் செய்யுமாறு சொல்கிறார். அவரும் செய்கிறார். ஆனால் அதற்காக அய்நூறு ரூபாய் கேட்கிறான். நாங்கள் பணம் எல்லாம் தர முடியாது ஒரு நாள் உனக்கு பார்ட்டி தருகிறோம் என்கிறார்கள். பார்ட்டி என்கிறபோது குளிர்பானங்கள், கேக் சாப்பிடலாம் என்கிறார்கள். அப்படித்தான் அவனும் அவன் நண்பர்களும் இந்த இரண்டு பெண்களுடன் ஒரு நாள் சிற்றுண்டி சாப்பிடுகிறார்கள். அந்தப் பெண் பரதநாட்டியம் பயில்கிறவள். தந்தை மட்டும் இருக்கிறார். அவள் சொல்கிறாள். எங்களின் பெற்றோருடைய உதவி இல்லாமல் நாங்கள் எங்கும் சென்றதில்லை இப்படி வந்து இருப்பது. அபூர்வம். கடற்கரைக்கு ஒருநாள் நாம் செல்லலாமா என்று கேட்கிறாள். அவர்கள் ஒத்து கொண்டு அந்த வாரம் கடற்கரைக்குச் செல்கிறார்கள். பிராமணப் பெண்ணுக்கும் கிறிஸ்துவ இளைஞனுக்கும் இடையில் காதல் மலர்கிறது. திருமணம் செய்து கொள்ள உடற்பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர் உதவுவதாகச் சொல்லி அவனை இந்த அடிதடி வேலைகள் வேண்டாம் என்று ஒரு நண்பரிடம் வேலைக்கு

அனுப்புகிறார். முதல் மாத சம்பளம் வாங்கிய கனவில் அந்த கிறிஸ்துவ இளைஞன் இருக்கிறான். தனக்குக் கல்லூரித் தேர்வு இருப்பதால் ஒரு மாதம் சந்திக்க இயலாது என்று அந்தப் பெண் சொல்லிவிட அவன் முதல் மாத சம்பளத்துடன் அவளைச் சந்திக்கத் திரும்புகிறான். கிறிஸ்துவ பையனுடன் நட்பு அவரின் அப்பாவுக்கு தெரிந்து அவர் தூக்குப் போட்டுக் கொள்ள முயல அவர் சொல்கிற ஒரு பையனைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறாள். இது ஒரு காதல்.

இந்த காதல் விவகாரம் நான்கு தளங்களில் நடக்கிறது. ராஜிவிடம் முதலிரவில் ராதா காதல் அனுபவம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறபோது அவன் சிறு வயதில் தான் அந்த சிறுமியைக் காதலித்ததாகச் சொல்கிறான். 20 வயதில் முஸ்லீம் விபச்சார பெண்ணைக் காதலித்ததாகச் சொல்கிறான். அவள் எப்படி கொல்லப் பட்டாள் என்பது தெரியவில்லை என்கிறான். பிறகு 30 வயதில் பிராமணப் பெண்ணை, நாட்டியக்காரியை- ஒரு கல்லூரி மாணவியை - காதலித்ததைச் சொல்கிறான். இந்த காதல்கள் எல்லாம் தோல்வி யடைந்ததால் தனக்கு திருமணத்தில் அக்கறை இல்லை என்று சொல்கிறான். ஆனால் தான் ஆண்களுடன் பழகுவதால் கே என்று முத்திரை குத்தப்படுவது அந்த சிறு கிராமப் பகுதியில் உள்ளவர்கள் பஞ்சாயத்தில் அவனை அப்படிக் குற்றம்சாட்டி,வெளியேற்ற விரும்புவது ஆகியவை அவனை அவள் மீது காதல் கொள்ளச் செய்ததைச் சொல்கிறான். இந்தப் படத்தில் வருகிற நான்கு கதைகளில் காதலர்கள் வெவ்வேறு வகையாக இருந்தாலும் வெவ்வேறு நபர்கள் ஆக இருந்தாலும் தன்னைத் தான் அதில் அடையாளம் கண்டு கொள்கிறான் அல்லது தான் தான் அவர்கள் என்று சொல்கிறான். இது ஒரு புதிய குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கிறது. இந்த படத்தில் உள்ளூர் மக்கள்தான் படத்தின் கதாபாத்திரங்களாக நடித்திருக் கிறார்கள். பல்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருக் கிறார்கள். அவர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் நுணுக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுந்தரம் சுனிதா இருவரின் பள்ளி வாழ்க்கை, காதல் மதுக்கடை ஆண் முஸ்லிம் பெண் நட்பு. அவள் எப்படி செத்துப் போனாள் என்பது அவனுக்குத் தெரிவதில்லை, பார்கவி மற்றும் ஜோசப் காதல் மதத்தால் தடைபடுகிறது, மதம் தான் எங்கும் தடையாய் இருக்கிறது என்று அந்த பெண் சொல்கிறாள். இந்த கதையில் வருகிற இசைக்கோர்ப்பும் புரகதா பாடல்களும் சிறப்பம்சங்கள். சிறு ஊரின் இரு பகுதிகளையும் பிரித்து ஓடுகிற தொடர்வண்டியின் சப்தமும் சாதாரண மக்களின் வசனங்களும் இயல்பானவை. இவை அனைத்தும் சேர்ந்து இந்த படத்தை ஒரு தீவிரமான கலைத்தன்மை உள்ள படைப்பாக உயர்த்தி இருக்கிறது இதன் இயக்குனர் மகா வெங்கடேஷ். மகா கலைஞன்.

●

# சுப்ரபாரதிமணியனின் படைப்புக்கலை

*சுப்ரபாரதிமணியன் படைப்புகள் பற்றிய ஒரு பன்னாட்டு கருத்தரங்கம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் முதல் தேதியில் நடைபெற்றது.*

*இந்த கருத்தரங்கின் தொடக்கத்தில் சுப்ரபாரதிமணியனின் படைப்புக் கலை என்ற நூலை இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் பிரசாந்தன் வெளியிட டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியை உமா தேவி பெற்றுக்கொண்டார்.*

**இலங்கை பிரசாந்தன் பேசுகையில்**

*சுப்ரபாரதிமணியனின் எழுத்துக்களை இந்த நூற்றாண்டின் சிறந்த சிறுகதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற்ற ஸ்தலங்கள் என்ற கதை மூலம் நான் அறிந்து கொண்டேன். பிறகு அவரின் படைப்புகளை வாசிப்பதை துவங்கியிருக்கிறேன். அவருடைய கவிதை தொகுப்புகளில் இடம் பெறும் அனுபவங்கள் வித்தியாசமானவை அவ்வகையில் பங்கன் தரை பாதாளம் குறித்த அவரின் கவிதை என்னை மிகவும் பாதித்து இருக்கிறது. நான் சுமார் 18 ஆண்டுகள் அவ்வப்போது பங்கரில் வாழ்ந்து இருக்கிறேன். இலங்கையின் போர் சூழல் காரணமாக விமானங் களிலிருந்து செல் அடிக்கிற போது தரையில் இருக்கிற பாதாள அறையை தான் பாதுகாப்பாக இருக்கும். அப்படி பாதுகாப்பாக இருக்கிறதிற்காக பாதாள அறைக்குள் சென்ற அனுபவம் எனக்கு உண்டு அப்படி ஒரு அனுபவத்தை ஒரு கவிதையில் சுப்ரபாரதி மணியன் பதிவு செய்கிறார். அந்த பாதாள அறையில் கடவுளும் சாத்தானும் சக மனிதனும் சந்தித்துக் கொண்ட சந்திப்பு பற்றி எல்லாம் சொல்கிறார், என்னை பொறுத்த அளவில் நான் பாதாள அறையில் கடவுளைச் சந்திக்கவில்லை சாத்தான்களை மட்டும் சந்தித்திருக்கிறேன். அப்படி ஒரு அனுபவத்தை உள்வாங்கிக் கொண்டு எழுதியிருப்பதில் சுப்ரபாரதிமணியன் மிக நுணுக்கமாகச் செயல்பட்டிருக்கிறார் அதேபோல நான் முன்னர் குறிப்பிட்ட அந்த ஸ்தலங்கள் சிறுகதையில் ஒரு பிரம்மச்சாரியின் மேன்சன் வாழ்க்கை நுணுக்கமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்கிற அனுபவம். நகரம் அந்த இளைஞனைத் துரத்திக் கொண்டிருக்கும் அவன்... அந்த நகரத்திற்குள் இருந்து சிதைவுற்று வெளியே செல்ல ஆசைப்படுகிற அனுபவம்.... சமையலின் வாசனை, ருசி... இதெல்லாம் மிகவும் நுணுக்கமாக அந்தச் சிறுகதையில் சொல்லப்பட்டு இருக்கிறது அந்த கதையைப் பற்றி நினைக்கிற போதெல்லாம் இலங்கையின் மகாகவி என்ற கவிஞரின் (சேரனின் தந்தை) ஒரு கவிதைதான் எனக்கு ஞாபகத்தில் வரும்.*

*நுணுக்கமான பார்வையும் சமகாலத் தன்மையும் சுப்ரபாரதிமணியனின் படைப்புகளில் அடையாளங்களாகச் சொல்லலாம்.*

**பேராசிரியை உமா தேவி டெல்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் சுப்ரபாரதிமணியனின் படைப்புகலை நூலைப் பெற்றுக் கொண்டு பேசினார்**: *சுப்ரபாரதிமணியன் படைப்புகளில் பின்நவீனத்துவக் கூறுகள் நிரம்ப உள்ளன அவரின் கவிதை, கதைகளை ஆய்வு செய்யும்போது இந்த பின்நவீனத்துவக்கூறுகள் சிறப்பாகச் செயல்படுவதைக் கண்டேன்- அதை அவர் இயல்பாக கொண்டிருக்கிறார். மையம் தவிர்த்த விஷயம் முதல் மனிதர்கள் சிதறுண்ட உலகம், தொடர்ச்சியின்மை ஆகியவை பல கதைகளில் வெளிப்பட்டு நவீனத்துவத்தின் சரியானக் கூறுகளை காட்டுகின்றன .அதே சமயம் அவரின் படைப்புகளை குறிப்பாக சிறுகதைகளை நவீனத்துவ அம்சங்களைக் கொண்டு சாதாரணமாக ஆய்வு செய்யலாம். ஆனால் பின்நவீனத்துவ ஆய்வு முறையில் அவை சரியான கட்டுமானத்தில் வந்துள்ளன என்பதும் அவர் சமகால தத்துவார்த்த விஷயங்களில் மட்டுமல்லாமல் வடிவங்களிலும் அக்கறை கொண்டு இருப்பது தெரிகிறது*

*பின்னர் நடைபெற்ற கருத்தரங்க அமர்வுகளில் புதுவைப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் மு கருணாநிதி, முனைவர் யார் சுசந்திரா, மேலூர் கலைக் கல்லூரி முனைவர் கணேஸ்வரி , கோயம்புத்தூர் ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி ஹிந்தி பேராசிரியர் முனைவர் இரா ரமேஷ் குமார் ஆகியோரின் தலைமைகளில் நடைபெற்ற அமர்வுகளில் பல்வேறு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன*

**அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பல்வேறு தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டார்கள் பேராசிரியர் ராமசாமி - தலைவர் தமிழியற்புலம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பேராசிரியர்- பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்**

*சுப்ரபாரதிமணியன் சிறுகதைகள் நாவல்கள் கவிதைகள் திரைப்படங்கள் குறித்த கட்டுரைகள் என்று பல்வேறு பரிமாணங்களில் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாய் எழுதிக்கொண்டிருப்பவர். தமிழனின் பல்வேறு அடையாளங்களை வெளிப்படுத்துகிற அவர் தமிழில் மூத்த படைப்பாளிகளில் ஒருவர். கல்விப்புலம் அவரின் படைப்புகளை எவ்வாறு உள்வாங்கிக் கொண்டு இருக்கிறது. எப்படி அதை கல்விப்புலம் எப்படி எதிர்கொண்டிருக்கிறது என்பதனுடைய அத்தாட்சியாய் சுப்ரபாரதிமணியனின் படைப்புகலை என்ற தலைப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் வெளிக்காட்டின. கல்விப்புலத்தில் ஒரு எழுத்தாளனின் பிரதிகளுக்கான எதிர்வினையாக ,எதிர்மறையாக அவை இருந்தன. எழுத்தாளர்களின் அனுபவத் தரவுகளின் தொகுதியாக அவரின்*

படைப்புகள் அப்பிக் கொண்டு இருக்கிறது. நெடுநல்வாடை படைப்பு மதுரையைப் பற்றி பேசுவது போல திருப்பூர் நகரத்தின் பாதிப்புகளை அவரின் படைப்புகளில் காணலாம். அவர் எந்த அடையாளத்தை நோக்கி எந்த தேடலை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்.. அவர் அந்தப் படைப்புகளில் அலைந்து கொண்டிருக்கிறார் .உள்ளிருந்து கொண்டிருக்கிறாரா என்பதை அந்த படைப்புகள் எல்லாம் சொல்கின்றன. அந்தப் படைப்புகள் குறித்து நானும் கட்டுரைகள் எழுதி இருக்கிறேன் .ஆய்வு மாணவர்களுக்கும் ஆய்வு செய்ய சிபாரிசு செய்திருக்கிறேன். சுப்ரபாரதிமணியனின் படைப்புகள் தேடலும் அலைதலும் கொண்ட ஒரு மனிதனின் அனுபவங்களாக விரிந்திருக் கின்றன. கி.ராஜநாராயணன் அவர்களை படைப்பு ரீதியாக அணிகினால் அவர் கரிசல் பூமியில் முன்பு இருந்தவர். படைப்பில் இப்போது இருந்து கொண்டிருப்பவர். வண்ணநிலவன் 50 ஆண்டுகளாக திருநெல்வேலியில் இருந்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் வாழ்ந்தவர். இப்போதும் அதே திருநெல்வேலி அனுபவங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர். ஜோ டி குரூஸ் நெய்தல் நிலத்தின் வாழ்க்கை அனுபவங்களில் வாழ்ந்தவர். இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆனால் சுப்ரபாரதிமணியனின் அனுபவங்களை, படைப்புகளைக் கவனிக்கிற போது அவர் எங்கே வாழ்கிறார் என்பது தெரியும். அவர் ஒரு காலத்தில் வாழ்ந்த ஹைதராபாத் செகந்திராபாத் நகரங்கள் ஆகட்டும், அதன்பின் வாழ்கிற திருப்பூர் நகரம் ஆகட்டும். இடையே அவர் பயணப்படுகிறார். பல ஊர்கள் ஆகட்டும் அந்த ஊர்களின் வாழ்க்கையை அந்த மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களை சுப்ரபாரதிமணியனின் தன் படைப்புகளில் கொண்டு வந்துவிடுகிறார். அது போல் தான் திருப்பூர் நகரத்தின் சாயம் அப்பிய நகர மனிதர்களை அவர் காட்டியிருக்கிறார் கிராமங்களில் இருந்து நகரத்துக்கு இடம் பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை எல்லாம் சொல்கிறார். உதிரி மனிதர்கள், சாதாரண தொழிலாளிகள், விளிம்பு நிலை மக்களைப் பற்றி அதிகம் எழுதி இருக்கிறார். இந்த மனிதர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் சுப்ரபாரதிமணியன் அலைகிறார். ஏன் இந்த மனிதர்கள் அலைகிறார்கள் வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்கள் அவர்களை அலைய வைக்கிறது அவர்களுடன் சுப்ரபாரதிமணியன் அலைந்து கொண்டிருக்கிறார். ஒரு படைப்பாளியின் அடையாளமாக அவர் அனுபவம் சார்ந்த படைப்பாளியாகத் தென்படுகிறார். அந்த வரிசையில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக் கிறார். பேசிக்கொண்டிருக்காமல் வாழ்க்கையினூடே அலைந்து கொண்டிருக்கிறார். மனித அனுபவமாகவும் அதைப் பதிவு செய்வதாகவும் அவர் இருக்கிறார். டெல்லியில் இருந்த ஆதவனின் படைப்புகள் டெல்லி வாழ்க்கையோடு முடிந்து விட்டிருக்கிறது. பல

*சமயங்களில் தி.ஜானகிராமனின் படைப்புகள் அனுபவங்கள் தில்லியில் இன்று பெற்றிருக்கின்றன. நீல.பத்மநாபன் அனுபவங்கள் திருவனந்த புரத்தில் தொடங்கியிருக்கின்றன. அசோகமித்திரனின் எழுத்துக்கள் ஹைதராபாத்தில் பலவிதங்களில் இருக்கிறது. ஆனால் சுப்ரபாரதி மணியன் தான் வசிக்கிற வாழ்கிற ஊர்களில் இருக்கிற சக மனிதர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து அந்த அக்கறையுடன் வாழ்க்கையில் அதனை விரிவாக படைப்புகளில் பதிவு செய்திருக்கிறார் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.*

**புதுச்சேரி மானுடவியல் துறை புதுவைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் முனைவர் செல்லப்பெருமாள் இவ்வாறு பேசினார் :**

*சமூகவியல் நோயியல் நோக்கு என்பது மானுடவியல் பண்பாட்டுக்கு அடித்தளமாக இருக்கிறது. சமூக நோயியலில் சமூக சீர்கேடுகளைப் பார்க்கும் நுணுக்கமான பார்வை சுப்ரபாரதிமணியனின் படைப்புகளில் இருக்கிறது நவீன வாழ்க்கை ஒரு சாதாரண மனிதனை எப்படி சீரழிக்கிறது அல்லது நவீன வாழ்க்கை மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்ன என்பதைப் பற்றி தீவிரமாக அவர் படைப்புகளில் ஆய்வு செய்கிறார். இன்றைக்கு நமக்கு முன்னால் இருக்கிற கேள்வி பொருளாதார முன்னேற்றம், சுற்றுச்சூழல் பிரச்சனையா என்பது முக்கியமாக இருக்கிறது. அந்த விவாதங்களை தமிழில் துவக்கி வைத்த படைப்புகள் சுப்ரபாரதிமணியன் உடையவை. அவரின் படைப்புகளில் குடும்ப வாழ்க்கை, சேவல்கட்டு அம்சங்கள் தவிர மற்றவை அனைத்தும் இந்த சமூக நோயியல் நோக்கு கொண்டவை. குடும்ப கதைகள் மற்றும் சேவல்கட்டு கதைகளில் பண்பாட்டு ஏற்றத்தாழ்வைக் காட்டுகிறார் ஜாதி கட்டுமானம் இந்தியாவில் எப்படி இருக்கிறது என்பதையும் கிராமச் சூழலில் அந்த ஜாதி கட்டுமானம் தரும் கட்டுப்பாட்டையும் விளக்குகிறார் இவை ஒரு வகையில் பண்பாட்டுத் தளம் சார்ந்த பிரச்சினைகளாக இருக்கின்றன. இவை தவிர மற்ற எல்லாமே சமூக நோயியல் சார்ந்த கூறுகள் தான். இடப்பெயர்ச்சி எந்த வகையான மனிதர்களை சிதைத்து வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது என்பதை அவர் பல்வேறு படைப்புகளில் காட்டுகிறார். அது இந்தியாவிற்குள் ஆனாலும் இந்தியாவிற்கு வெளியே ஆனாலும்.. வட இந்தியா ஆனாலும்... திருப்பூர் ஆனாலும் ஹைதராபாத் செகந்திராபாத் ஆனாலும்... மலேசிய ஆனாலும் பல்வேறு தளங்களில் அவற்றைக் காட்டுகிறார். நவீன வாழ்க்கை தனிமனிதனுக்கு தரும் சிரமங்கள் நவநாகரீகம் தந்திருக்கிற வளர்ச்சி போக்கும் அடையாளம் சிதைத்த போக்கும் இவற்றினூடே தனி மனிதனின் வாழ்வுப் போராட்டமும் அவரின் படைப்புகளில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. சித்தாந்த பின்புலம் இருந்தாலும் அதன் வாடை எங்கும் இல்லை.*

*அதற்கான விஷயங்களை வலிந்து தெரிவதில்லை. அதிகார பீடங்களில் ஆட்சியாளர்களும் இது சமூகத்தில் பின்புலமாய் இருந்துகொண்டு கட்டமைக்கிற விஷயங்களைப் பற்றி இவரின் படைப்பை படங்கள் பேசுகின்றன இது தமிழில் மிக முக்கியமான கோணமாகவும் இருக்கிறது*

**விழாவில் நிறைவு விழா பேருரை ஆற்றினார் ஓவியர் சந்துரு அவர்கள் அவர் பேசும்போது இப்படி குறிப்பிட்டார்:**

*ஒவ்வொரு மனிதனும் தனக்குள் பல மனிதர்களைக் கொண்டிருக்கிறான் அந்த பிளவுண்ட மனம் அவனைத் துரத்துகிறது காட்டுக்குள்ளும் செல்லும்படி துரத்துகிறது. அங்கு சென்றபின் பல சமயங்களில் ஏற்படும் பசி அவனை ஊரை நோக்கி விரட்டுகிறது பாதுகாப்பான சுவையை அவன் எண்ணுகிறான் அந்த சுவையால் காதல் பெருகும். பொழுது நீடிக்கும். காலம் கழியும். ஓவியம் வரைவதும். எழுதுவதும் கழுதை மேய்ப்பதும் ஒன்றுதான். அந்தந்த விஷயங்களில் இருக்கும் ஈடுபாடு தான் முக்கியம் தொழில்முறை படைப்பாளிகள் வாழ்க்கையை வியாபாரத்திற்காக பயன்படுத்துகிறார்கள். ஆனால் படைப்பிலக்கிய வாதிகள் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து ஓவியம் போல் பதிவு செய்கிறார்கள். பூவின் அமைதிக்குள் இருக்கும் நிதானம் முக்கியமானது. அது தரும் வாசம் முக்கியமானது .அது காட்டும் சிவப்பு பச்சை என பல வர்ணங்கள் முக்கியமானவை. அவன் சக மனிதர்களுடன் கொள்ளும் உறவு முக்கியமானது. அவற்றுள் அவனின் உறவும் தேடலை நோக்கிய பயணமும் முக்கியமானது. அதிலும் இயற்கையை நோக்கிய பயணம் மானுடப் புதுமை. இங்கு நாம் பங்கு போட்டுக் கொள்கிறோம். வாழ்வதே கலை. அது ஏகாந்தமாக இருப்பது கலை தேடலாகும். சந்தோசமாக வைத்து இருப்பது கலை. கலை சிந்திக்கவும் செய்யும். சமாதி பழக்கமல்ல சர்வ பழக்கம் என்று வலியுறுத்தவும் செய்கிறது. அன்பை ஆத்மாவைப் பற்றி பேசிவிட்டு காசு கேட்காதே. ஞானமாய் வாழ் என்று வலியுறுத்துகிறது. சுப்ரபாரதிமணியன் இவற்றை வலியுறுத்துகிறார். அவரின் முதல் தொகுப்பான நான்கு பேரும் 15 கதைகளும் தொகுப்பில் நான் ஓவியங்கள் வரைந்து இருக்கிறேன். அவரின் கனவு இதழில் ஆரம்ப காலத்தில் ஓவியங்கள் வரைந்து இருக்கிறேன் அவற்றில் என் ஓவியங்கள் அட்டை படங்களாக வந்திருக்கின்றன. அவர் தொடர்ந்து சுற்று சூழல் சார்ந்து இயங்கி வருகிறார் இயற்கையைத் தேடி ஒரு பயணம் அவை.*

*இந்த விழாவில் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரி சங்கரன்கோயில் கல்லூரியின் முதல்வர் முனைவர் குமரகுருபரன் வரவேற்புரை நிகழ்த்தினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் ஞான ஸ்டீபன் வாழ்த்துரை வழங்கினார் கருத்தரங்க அறிமுக உரையை கருத்தரங்க*

ஒருங்கிணைப்பாளரும் மனோன்மணியம் பல்கலை கழக உறுப்புக் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ராம பாண்டி நிகழ்த்தினார் மற்றும் ஆய்வு மாணவர்களும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் கலந்து கொண்டு தங்கள் கட்டுரைகளை வாசித்தனர்.

இந்த கருத்தரங்கின் முக்கிய அம்சங்களாக சுப்ரபாரதிமணியன் படைப்புகள் பற்றிய விவாதங்களும் நாட்டுப்புறவியல் சார்ந்த பல்வேறு பேராசிரியர்கள் நவீன இலக்கியத்தை அணுகியதும், கல்லூரி மாணவ மாணவிகள் படைப்புகளை எதிர்கொள்ளும் விதம் பற்றி தங்களை கருத்துக்களை பகிர்ந்து கொண்டதும் முக்கியமான அம்சங்களாக கொள்ளலாம்,

**படைப்புக்கலை கருத்தரங்க விரைவில் சுப்ரபாரதிமணியன் ஏற்புரை நிகழ்த்தினார்:**

பின்நவீனத்துவத்தின் தாக்கம் தமிழில் தொண்ணூறுகளில் அதிகம் இருந்தது சோவியத் வீழ்ச்சிக்குப்பின் சோசலிசத்தின் பலவீனத்திற்கு பின் பின்நவீனத்துவம் உலக அளவில் அதிக தாக்கத்தை செய்தது. அந்த வகையில் பின்நவீனத்துவத்தின் கட்டுடைத்தலும் மையம் இல்லாததும் உதிரி மனிதர்களின் வாழ்க்கையும் என் படைப்புகளில் சாயத்திரை நாவல் முதல் கொண்டு வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் தாக்கத்தை செய்தது. திருப்பூர் நகரம் இன்றைக்கு பத்து லட்சத்திற்கும் மேலான மக்கள் வாழக்கூடிய நகரம் .அந்த நகரத்தில் ஜனத்தொகையில் பாதிக்கு மேல் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்களில் பிரச்சனைகளும் வாழ்வியலும் என்னை தொடர்ந்து பாதிக்க வைத்து படைப்புகளை வெளிப்படுத்தச் செய்கிறது. உலகமயமாக்கல் ஆனாலும் சரி உள்ளூர் வணிகம் , ஜிஎஸ்டி வரி விதிப்பு, ஆனாலும் சரி கார்ப்பரேட்டுகளின் சமூக பொறுப்புணர்வு ஆனாலும் சரி எல்லாமே நேரடி விளைவுகளைக் கொடுக்கிற வியாபார நகரமாக திருப்பூர் இருக்கிறது. அந்த வகையில் அந்த நகரத்தின் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்வது முக்கிய கடமையாக இருக்கிறது. அப்படித்தான் சாயத்திரை முதற்கொண்டு என் நாவல்கள் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்கிற வெளிப்பாட்டுச் சாதனங்களாக இருக்கின்றன இந்த கருத்தரங்கில் சாயத்திரை நாவல் குறித்து அதிக அளவில் பேசப்பட்டது கோமணம் போன்ற நாவல்களில் இருக்கும் நாத்திகப் பார்வை மீறி ஒரு ஆன்மீக தளமும் வழக்கமான தென்படும் பொருள் இருப்பதை சிலர் சுட்டிக்காட்டினார்கள். நீர்த்துளி போன்ற நாவல்கள் சுற்றுச்சூழல் சார்ந்து மட்டுமல்லாமல் இன்றைக்கு பாலியல் சார்ந்த விஷயங்களிலும் ஒற்றைப் பெற்றோர் முறையிலும் திருப்பூர் நகரத்தின் பாதிப்புகளை குறிப்பாக பெண்களின் வாழ்வியலைச் சொல்லும் படைப்புகளாக இருக்கின்றன.

*அந்த வகையில் மக்களுடன் இணைந்து அவருடைய வாழ்க்கையைக் கூர்ந்து பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. நான் இடதுசாரி தான் இடதுசாரி அழகியலை படைப்புகளில் கொண்டுவர முயன்றிருக்கிறேன் வறட்டுத்தனம் தவிர்த்த அழகியல் தன்மைக்கே முயன்றிருக்கிறேன் சமூகத்துடன், சமூகவியல் மனிதர்களுடன் அன்பும் பகிர்வும் தான் இந்த படைப்புகளின் ஆதாரமாக இருக்கிறது*

*கட்டுரை: ராம பாண்டி பேராசிரியர் , தமிழ்த்துறைத் தலைவர்., மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் உறுப்புக் கல்லூரி சங்கரன்கோவில் திருநெல்வேலி மாவட்டம் ( **95005 51907**)*

●

---

## கபால கிருஷ்ணா

கம்மனாட்டிகள் கேட்டிருக்கிறேன்
எலிமனாட்டிகளை உணர்கிறேன்
உப்பு புளி காரம்
மார்க்ஸ் காந்தி பெரியார்
உவர்ப்பு கசப்பு இனிப்பு
புத்தன் ஏசு நபி
எனக்கு எல்லாம் வேண்டும்
கலவைதான் புரியவில்லை
காதல் கற்பு இறை
புரியவில்லை
மண்டைக்குப் பிறந்தவர்தானே
தர்ம மருத்துவமனையில் நான்.
ராமநவமி கிருஷ்ணாஷ்டமி
சுகபிரசவமா அறுவையா
கபால கிருஷ்ணா

**–சாமக் கோடாங்கி ரவி**

## தேர்தல்... ஒரு தேடலே...

தேர்தலுக்கு முன்...
தேடிச்சென்று
பார்க்கின்றனர்
தேவை ஈல்லாத
ஈலவசத்தையும்
தேவையாக்குகின்றனர்....
ஒயா... ஏன்று
தேடிச்சென்று
சிக்கல்கள்...
கூறித்
ஆழுது புரண்டாலும்
சிக்கல்கள் முடிவதில்லை
தேர்தல்கள் மட்டுமே
முடிகின்றன...
தேடுகின்றோம்
நல்ல தலைவனை.
தேர்தல்
ஒரு தேடலே...!

**– தமிழமுது**, *புதுச்சேரி.*

# ப. சுடலைமணி
## கவிதைகள்

1.
புவியீர்ப்பு விசைக்குக்
கட்டுண்ட
உன் கிளைகளை
நிலமகளின்
மேனியைத்
தொட்டும் தொடாமலும்;
தழுவுமாறு படர விட்டுள்ளாய்
காட்டுத்தீயொத்த
உன் மேமாத மலர்களை
மனித விரல்களின்
வன்தீண்டுதலில் இருந்து
எப்படிக் காப்பாற்றுவாய்
காட்டுத்தீ மரமே...

2.
காட்டு வழிப் பயணத்தில்
சக பாதசாரிகளைப்
பின்னுக்குத் தள்ளி
முன்னோக்கி விரைகிறேன்
கண்ணில் படும்
முதல் காட்டோடையின்
குளிர்ச்சியைக்
கைகளில் ஏந்தவேண்டும்
கற்பனைதானே
கனவு மெய்ப்படட்டும்.

3.
வெட்ட வெட்ட
தலை நிமிர்ந்து நிற்கும்
காட்டு மருதாணிச்செடியின்
ஆணவச் சிரிப்பிலிருந்து
இன்றைய கவிதையின்
பாடுபொருளைப்
பிரதியெடுக்கிறேன்.

4.
மழைக் காலங்களிலும்
நீயாக
பூசிக்கொண்ட
அரிதாரம்
கலையாமல்
பாதுகாக்கிறாய்...
அரிதாரம்
தற்காலிகமானதுதான்
என்பதை
அறியாதவளா நீ...

5.
அழகநெரியிலிருந்து
அருகன்குளம் வரையிலும்
நீண்டு கிடக்கிறது
புனரமைக்கப்பட்ட
அரை வட்டக் குளக்கரை...
கிழக்கு மேற்காக
செல்லும் கூட்டம்
ரசித்துச் செல்கிறது...
எனக்கென்னவோ
புதுப்பெண்ணின்
கழுத்து நகைகளை
ஆராயும் தொனியே
மேலோங்குகிறது...

6.
கடற்கரை மணலில்
தனியாக
அமர்ந்திருக்கிறேன்
அலை ஓசை
என்னை
எதுவும்
செய்யவில்லை
ஏற்கெனவே
எப்பொழுதோ
யாருடனோ
அமர்ந்திருந்த
நினைவு மட்டும்
வாட்டி வதைக்கிறது.

7.
கருக்குகளின்
வெட்டுகளைப்
பரிசாகப்பெற்று
இரணங்களுடன்
பதனீர்
இறக்குகிறாய்!
தித்திப்பு
சுவையை
ஒருமுறையேனும்
அனுபவித்திருக்கிறாயா?

8.
காலைநேர
தேன்சிட்டுகளின்
செல்லமான
சிணுங்களும்
காற்றில்
மிதந்துவரும்
வேப்பம்பூ வாடையும்
ஒரு கவிதையின்
பிரசவத்திற்குப்
போதுமானது.

---

# வீராப்பு

தண்ணி பொழுங்காத
சாதிக்காரப் புள்ளைய
சினேகிதம் பண்ணி
கட்டிக்கிட்டவன்
மூத்தவன் பழனிச்சாமி
சேதி காதுக்கு வந்தப்போ
அண்டமே கிடுகிடுங்க
அங்கம் பதறிக் கொதிச்சு
வெட்டிப் பொலி போடாம
உடமாட்டன்னு
தீட்டுன வீச்சருவாளோட
வேட்டிய மடிச்சுக் கட்டி
கெளம்புனவருதான்
சென்னியப்பன்
அப்பறம்
ஒட்டுமில்ல
ஒரவுமில்லேன்னு
தலமுழுகி
வெட்டி உட்டு
ரெண்டு வருசமாச்சு
பொறந்து ஆறு மாசமான
பேத்திய எடுத்துகிட்டு
அவுங்க ரெண்டு பேரும்
ஊட்டு வாசல்ல
வந்து நின்னப்போ
கையும் ஓடுல
காலும் ஓடுல
அப்பாரு மூஞ்சிய
அப்பிடியே உருச்சு வெச்ச
அந்த
பச்ச மண்ணு
ஜொல்லு ஒழுகி மினுக்குற
பொக்க வாய காட்டி
மொகம் பாத்து சிரிச்சப்ப
சரிஞ்சுதான் போச்சு
சென்னியப்பனோட
வீராப்புக் கோட்டை
அன்னைக்கினு பாத்து
பேத்திய தூக்கிக் கொஞ்சி
பொடக்காலிப் பக்கம் வந்த
சென்னியப்பனப் பாத்து
நமட்டலாத்தான் சிரிக்கறாங்க
அடுப்பெரிக்க
சுள்ளி தரிக்கும்
ஊட்டுக்காரி நாச்சாத்தாளும்
அந்த
பழைய வீச்சருவாளும்

- துருவன் பாலா

தேவரசிகன்
கவிதை

# எல்லைக்கு வெளியே

தொடர்புகொண்ட அனைவரும்
தொடர்புக்கு வெளியே
இருக்கும்போது
தொடர்புகொள்வது எவ்வாறு?

ஒருகுரல் கிடைத்தால்கூடப்போதும்,
அந்தநேரத்துத் தாகமும், தனிமையும்
தணியுமெனத் தகிக்கும்போது,
தொலைந்துபோதல் நிகழ்வதுதான்
மாகொடுமை.

அதைவிட
நம்மை யாரோ தொலைத்துவிட்டார்கள்
என்பதும்
அந்தக் கணத்து உண்மைதான்.
எல்லோராலும், எல்லா சமயங்களிலும்
எல்லோருடனும்
இருக்க முடியாதென்பதும்
நிதர்சனந்தான்.

அடைபட்ட அறையின் நடுவே
காற்றுப் புகாமல் சாத்தப்பட்ட
வாயிற் கதவுகளையும்,
ஜன்னல்களையும்
தட்டித்தட்டிக் கைகள் ஓய,
தேடப்பட்டவரின் குரலும்,
அணுக்கமும்
தூர தூரமாய் விலகும்.

தொடர்பில்லாமல் இருப்பது
அபத்தம் என்றும்,
தொடர்புடன் இருப்பது
அவசியம் என்றும்,
ஸ்வாதீனம் சுடுகின்றபோது,
தொடர்புகளைத்
தேர்ந்தெடுக்கும்
நேரமும், காலமும்
நம்வசம் இருந்தாலும்,
நம்மைத் தேர்வு செய்யும்
தேவையும், விழைவும்
தொடர்புகளுக்கில்லாமல்
போய்விடலாம்.

## புதியவெளியீடுகளில்...

**சுப்ரபாரதிமணியனின் நூல்கள்**

**புறாவும், அரசியல்வாதியும்**

(இந்திய, வெளிநாட்டு மொழிபெயர்ப்புக்கவிதைகள் ரூ.60)

**பேசாத.. -லாமியா அஞ்சும்** (இளம் பெண் கவிஞரின் கவிதைகள் ஆங்கிலத்திலிருந்து தமிழில். ரூ 30)

**நெசவை இழந்து விட்டு இந்த தேசம் நிர்வாணமாகப் போகிறதா?** (கட்டுரைகள் ரூ.25)

வெளியீடு : கவிநிலா பதிப்பகம், திருப்பூர். 98431 22403

சுப்ரபாரதிமணியனின் **"கடவுச்சீட்டு"** மலேசியப் பின்னணி நாவல்:

**- பெ.இராஜேந்திரன்,** தலைவர், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம், கோலாலம்பூர்.

சுப்ரபாரதிமணியன் தன் தொடர்ந்த நாவல் செயல்பாடுகளில் அவரின் 15 வது நாவலாக "கடவுச்சீட்டு" மலேசியப்பின்னணி நாவலாக வெளிவந்துள்ளது. அவரின் மலேசியா அனுபவங்களை முன்பே கட்டுரைகள், சிறுகதைகள் மூலம் பல படைப்புகளில் எழுதியிருந்தாலும் ஒரு முழு நாவலாக இதைத் தந்திருக்கிறார். அதுவும் கோலாலம்பூர்-செந்தூல் பகுதியில் வாழும் ஒரு தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கையை இந்நாவல் சொல்லுகிறது.

ஒரு வெளிநாட்டு தமிழ்ப்பெண்ணின் கனவு சிதைந்து போவதை இந்நாவல் காட்டுகிறது. அந்தப்பெண் இங்கு வருவதற்கு முன்பே பெண் பார்க்கும் படலத்தின் போதே இந்நாட்டைப்பற்றி வருங்காலக் கணவனிடம் பல சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள். இங்கு தமிழர்கள் எவ்விதம் இருக்கிறார்கள். கோவிலகள் உண்டா. முஸ்லீம் நாடென்றால் சட்டதிட்டங்கள் கடுபிடியா. மதுப்பழக்கம் ஆண்களிடம் எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறாள். இங்கு வந்த பின்பு அவள் கணவன் குடிகாரனாக இருப்பதைக் கண்டு வாழ்க்கையை ஓட்டுகிறாள். இந்த நாட்டு நடைமுறையில் இருக்கும் சுகாதாரமும், மருத்துவமனைகளில் இல்லாத லஞ்சம் போன்றவை அவளை மகிழ்விக்கின்றன. ஆனால் அவளின் வாழ்க்கை யதார்த்தம் வேறு மாதிரியாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் சர்க்கரை நோய் என்பார்கள் இங்கு இனிப்பு நீர் வியாதி என்கிறோம். இதுபோன்ற சிறுசிறு விசயங்களையும் கவனமாகக் குறிப்பிட்டிருக்கிறார். லிட்டில் இந்தியா ஜோசியர்கள் வரை இவரின் எழுத்துப் பார்வையில் படாதவர்கள் இல்லை. மஜாஜ் சமாச்சாரம் முதல் மலேசியா பற்றிய பல விபரங்களை இந்நாவலில் கொட்டி விட வேண்டும் என்ற ஆவல் இதில் தென்படுகிறது. அவற்றை பலஇடங் களில் விபரங்களாகவும் சில இடங்களில் உரைநடைமூலமாகவும் தெரிவித்திருக் கிறார். தோட்டப்புறத்தில் பங்களாதேஷ்காரர்கள், இந்தோனிசியாக்காரர்கள் அதிகரித்து தமிழர்களின் நிலை மோசமாகியும் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட சமீப நிகழ்வுகள் வரை இதில் பதிவாகியிருக்கின்றன.

தமிழ் இளைஞர்களின் வன்முறைக்கலாச்சாரத்தில் கட்டை, சரக்கு போன்றவை ஆக்கிரமித்திருப்பதைச் சொல்கிறார். சீனர்களின் வாழ்க்கை முறை, பொருட்களை எரித்தல், இந்தோனிசியப்புகையால் பாதிப்பு போன்றவையும் தப்பவில்லை. இவ்வளவு சுற்றுச்சூழல் சிறப்பாக இருக்கும் போது மூன்று வேளை உணவையும் உணவு விடுதிகளில் சாப்பிடும் பழக்கத்தையும் தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் கேடாக இருக்கும் போது உணவு விடுதிகளை அதிகம் நாடாததையும் சொல்கிறார். இலக்கியம் வேதனையை, சோதனையை மட்டுமா சொல்லவேண்டும் என்ற கேள்வி எழும்பாமல் இல்லை. ஆனால் மலேசிய தமிழ் குடும்பம் ஒன்றின் யதார்த்ததை இதில் வெளிக் காட்டியிருக்கிறார். அகிலனின் "பால் மரக்காட்டினிலே" அறுபதில் இருந்த மலேசியா தமிழ்ச்சமூகத்தை பிரதிபலித்தது என்றால் சுப்ரபாரதி மணியனின் நாவல் இப்போதைய சூழலில் எழுதப்பட்டிருக்கும் முக்கியப் படைப்பு என்ற வகையில் சிறப்பு பெறுகிறது. (ரூ.100 முன்னேற்றப் பதிப்பகம், சென்னை)

........................................................................ **சுப்ரபாரதிமணியனின் புதிய நூல்கள்**

**மூன்று நதிகள்-** சிறுகதைத் தொகுப்பு - எழுத்துப் பிரசுரம், சென்னை (ஜீரோ டிகிரி பப்ளிகேசன் பிரிவு) ரூ.180

**வேட்டையாடிகள் -பறவைகளின் உலகம்** : என்சிபிஎச், சென்னை. ரூ.65

Green Politics - Poems on envirnment

**பெண்களும் தொழிற்சங்கங்களும்** (மொழிபெயர்ப்பு) இரண்டும் சேவ், திருப்பூர்.

**சுப்ரபாரதிமணியனின் மலேசியா பின்னணியிலான சில நூல்கள் :**

1. **மாலு** - நாவல் (உயிர்மை பதிப்பகம், சென்னை)
2. **கடவுச்சீட்டு** - நாவல் (முன்னேற்றப் பதிப்பகம், சென்னை)
3. **ஓ..மலேசியா** -கட்டுரைகள் (பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், சென்னை)
4. **தோட்டக்காடு** - மலேசியா பின்னணிச் சிறுகதைகள் (பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், சென்னை )

**"ஓ.. சிங்கப்பூர்"**

சிங்கப்பூர் எழுத்தாளர்களின் சில சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் (ஷாநவாஸ், ரெ.பாண்டியன், சித்துராஜ் பொன் ராஜ், ஜெயந்தி சங்கர், மாதங்கி, மணிமாலா மதியழகன் ஆகியோரின் சிறுகதைகள் மற்றும் இவர்கள் பற்றிய கட்டுரைகளும் எம்கே/குமார், அழகுநிலா படைப்புகள் பற்றிய சுப்ரபாரதிமணியனின் கட்டுரைகளும்)

**பெண்மை**

மலேசியா பெண் எழுத்தாளர்களின் சில சிறுகதைகள்

(எழுத்தாளர்கள் : வாணிஜெயம், மங்கள கவுரி, யோகி, ரஞ்சனி, வே.ராஜேஸ்வரி, சனாஆதிராஜ், ஜெயந்தி கைலாசம், உதயகுமாரி கிருஷ்ணன், ஜோதி சுப்ரமணியம், எஸ். பி பாமா. விமலாரெட்டி)

இருநூல்களும் தொகுப்பு: சுப்ரபாரதிமணியன்

வெளியீடு : கவிநிலா பதிப்பகம், திருப்பூர். 98431 22403

**ரேகை** – சுப்ரபாரதிமணியனின் நாவல்- ஆயிஷா இரா நடராசன்

இன்றும் புதினங்கள் நெடுங்கதைகள் சிறுகதைகள் என கதைகளை பிரிக்கிறோம். ரவீந்திரநாத் தாகூரின் குமுதினி 300 பக்கம் என்றாலும் உலகம் அதை நாவல் என்று அழைப்பது இல்லை. ஆங்கில நாவலாசிரியர் ஹென்றி ஹட்சன் உட்கார்ந்து ஒரே மூச்சில் வாசித்து முடிக்கும் எதுவும் நாவல் கிடையாது என்கிறார். ஆனால் இது பழைய கருத்து இந்த வாட்ஸப் யுகத்தில் வாசிப்பு ஒரே மூச்சில் முடிப்பது மட்டுமல்ல நறுக்கு தெறித்தார் போல் உண்மையை வெளியிடுவது. வாசிக்கும் மனங்களை பாதிப்பது என மாறிவிட்டது.

சுப்ரபாரதிமணியனின் எழுத்து நெஞ்சை தொடும் சுடும் என்ற வகைப்பாட்டை சேர்ந்தது ரேகை. திருப்பூர் நாவல் ரத்தமும் சதையும் கலந்த மற்றொரு படைப்பு.

ஜாதகம் சோதிடம் பார்க்கும் பரம்பரை குடும்பத்தில் சிதையோடு தொடங்கும் கதை நவீன நாடகக்காரர் சுப்பையா முதல் விலைமகள் பரமேஸ்வரி கடும் உழைப் பாளியான அமலம். கிறிஸ்துவ போதகர், கள்ளநோட்டு கோபால் என விரியும் யதார்த்த உலகம் புதிய திருப்பூரை டாலர் நகரமாக நம்முன் விரிய வைக்கிறது. கலை இரவில் வரும் தங்கர்பச்சானும் பாலாஜி சக்திவேலும்கூட பாரதி வேசம் சுப்பையாவைப் பாராட்டுகிறார்கள். ஆனால் அவருடைய குறும்பட டைரக்சன் கனவு பலிப்பதே இல்லை. எம்பில் பிராஜெக்ட் செய்யும் ரத்தினவேல் உட்பட நாம் அனைவரும் நாவலோடு எளிதில் இறுதியில் ஐக்கியமாகி விடுகிறோம்.

கேம் கூலி முறை பற்றியும் அதன் ஒழிப்பு பற்றியும் விவரிக்கும்போது பீகார் நேபாளக் கூலிகள் குறித்த தனிப்பதிவு இந்த நாவலில் உள்ளது அழுத்த மான ரேகை இது

(ரூபாய்.125, பொன்னுலகம் பதிப்பகம், திருப்பூர், பக்கம் 142).

**நைரா** – சுப்ரபாரதிமணியனின் நாவல். (நைரா- நைஜீரிய ரூபாய்)

உலகமயமாக்கல் வியாபாரச் சந்தைகளை எல்லா நாடுகளுக்குமாய் திறந்து விட்டிருக்கிறது. வியாபாரம, பிரச்சினைகள் என்று மக்கள் அலைகிறார்கள். புலம் பெயர்ந்தும் வாழ நிர்பந்தம் ஏற்படுகிறது. அப்படி பல மாநில மக்களும், வேற்று நாட்டு மக்களும் தொழில் நகரங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் ஒரு பிரிவினர் நைஜீரியர்கள். வியாபாரம் சார்ந்து வந்து குழுக்காக வாழ்கிறார்கள். வாழும் இடங்களில் அவர்களின் நடவடிக்கையால் உள்ளூர் மக்களுக்கு கலாச்சார அதிர்ச்சி ஏற்படுகிறது. அந்நியமும் ஏற்படுகிறது. அவர்களின் புறச்சித்திரங்கள் லகுவாகக் கிடைத்து விடுகிறது. அக அளவில் அவர்களின் பிரச்சினைகள் பன்முகத் தன்மை கொண்டதாய் இருக்கிறது. அவ்வகை மக்களின் ஒருகுறிப்பிட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் எதிர் கொள்ளும் அனுபவங்கள் இதில் காட்டப்பட்டுள்ளன. உள்ளூர் மக்களின் அதிர்ச்சி அனுபவங்களும்கூட. எப்படியும் சிக்கல்கள் சார்ந்த வலிகளாயும் இருக்கின்றன. புதிய திறப்பாய் பலரின் வாழ்க்கை இதில் காட்டப் பட்டுள்ளது. நகரத்தில் வாழும் மனிதர்களின் மன நெருக்கடிகளும், கல்வியின் வழியே பார்க்கும் பார்வையும் இதில் குறிப்பிடத்தக்கது.

NCBH chennai 190 pages Rs 150

**திருப்பூர் தாய்த்தமிழ்ப்பள்ளி இருபதாம் ஆண்டு மலர்**

கல்வியாளர்கள் ச.சீ. இராஜகோபால், வசந்தி தேவி, விஜய் அசோகன் (சுவீடன்), மருத்துவர் முத்துச்சாமி, சுப்ரபாரதிமணியன், வெ.குமணன், சு,மூர்த்தி, உட்பட பலரின் கல்வி சார்ந்த கட்டுரைகள், குழந்தைகளின் படைப்புகளுக்கானத தனிப்பகுதி.

நன்கொடை : ரூ 200. திருப்பூர் தாய்த்தமிழ்ப் பள்ளியின் கல்விப் பணிக்கு உதவ மலரின் பிரதிகளை வாங்குங்கள்

**9443702444, 9442531032, 98946 44366**

மின்னஞ்சல் : **tamilvazhikalvi@gmail.com**

**முகவரி: மருத்துவர் முத்துசாமி, கண்ணன் மருத்துவமனை, சக்தி நகைக்கடை எதிரில், மேட்டுப்பாளையம் பேருந்து நிறுத்தம், பெருமாநல்லூர் சாலை, திருப்பூர்.**

---

## மலையாள எழுத்தாளர் வெள்ளியோடனின் “ஆயா” சிறுகதைத் தொகுப்பு: சுப்ரபாரதிமணியன்

**ம**லையாள எழுத்தாளர் வெள்ளியோடன் தமிழுக்கு “கடல்மரங்கள்” என்ற சிறுகதைத் தொகுப்பு மூலம் தமிழுக்கு அறிமுகம் ஆனவர். அத்தொகுப்பின் கதைகள் சர்வதேச தளங்களில் வெவ்வேறு நாட்டுப் பின்னணியில் உருவாக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. ***(The trees of seas)*** ஆங்கில நூலின் முன்னுரை இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம்.

இந்த இரண்டாம் தொகுப்பு முதல் தொகுப்பிலிருந்து அதன் களங்களில் வித்யாசப்படுகிறது. பெரும்பான்மையானக் கதைகளில் பயணங்களும், சொந்த ஊர் திரும்புகையில் வந்து சேரும் அனுபவங்களும் நிறைந்திருக் கின்றன. கதை சொல்லியும், கதா பாத்திரங்களும், வாசகனை விளித்துச் சொல்லப்பட்டவையாகவும் கதைகள் உள்ளன.

இரண்டாம் கதையில் உடல், உயிர், இணைந்த சம்பாஷணை அதை ஒரு சுவாரஸ்யமானக் கதையாக்குகிறது. நிகழ் காலமும் புராணமும் இணைந்து ஓடும் நதி போல் கதைகள் அமைந்துள்ளன. குழந்தை இல்லாத தம்பதிகளின் உணர்வு இரு கதைகளில் பிரதிபலிக்கிறது. தங்கும் விடுதியில் வீணாகும் விந்து. வீட்டில் இயலாமல் போவது வெறுமையைத் தருகிரது. அதிலும் செவிலித்தாயின் உணர்வுகள் நெகிழ வைப்பவை. அது தரும்

வெறுமை எண்ணங்களை அக்கதைகள் பிரதிபலிக்கின்றன. தற்கொலை முயற்சி பற்றிய அப்படியொரு கதை வினோதமாகவே உருவாகியுள்ளது. அரசியல்வாதிகளின் அதிகாரம் பற்றிய இரு கதைகள் நிதர்சன உலகைக்காட்டுகின்றன. நிழல் வியாபாரிகள்.. அரசியல்வாதிகள்... வழிசாட்சியங்கள் கதையில் ஒரு நாய் திருடப்படுவது. காவல்துறையாளர் வீட்டில், அது விற்கப்படும் இடம்.. சுவாரஸ்யம், இரு பெண்களின் மாறுபட்ட உலகங்கள் பற்றிய கதை மாறுபட்டதாகும், இயந்திரமாகிப்போன வேலை மற்றும் குடும்பச்சூழலை எல்லாமே பிசி என்ற இறுதி வாக்கியங்கள் சொல்லிக் கொண்டே இருக்கின்றன... படங்கள் சொல்லும் பாடங்கள்... நிறைய உள்ளன, அதிலும் போர் முனை தாயின் அவலம் முக்கியமானது.. ஊமையனின் கனவு பற்றியதும்.இரண்டு ரோஜாக்களில் ஒன்றுக்கு மனமில்லை என்ற கதையில் இரு பெண்களின் உலகம் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்பெண், நகரப் பெண். கணினி பயன்பாட்டில் சரளம் ஒரு புறம். இன்னொரு புறம் இதெல்லாம் தெரியாத ஒருத்தி. மணியார்டர் கதையில் அது தரும் ஆதரவு மனிதர்களை இயங்கச் செய்கிறது... ஆழ வெள்ளத்தில் அகப்பட்ட மீன் குஞ்சுகள் . ஒரு பெண் தற்கொலைக்கு முயல இன்னொரு பெண் உதவும் மனப்பான்மையில் பெண் உணர்வு மிகுந்துள்ளது. மதவாதம் அல்லது மனிதர்களா என்ற கேள்விகளை இக்கதைகள் உருவாக்குகின்றன. சிறு கணங்களின் மகிழ்வு, அரசியல் வன்முறை, பாசிசத்தின் புதிர் எல்லாவற்றிலும் போன்ற அம்சங்களையும் இவற்றில் காணலாம்.

கவித்துவமாய் பல வரிகள் குறுக்கிட்டு யோசிக்க வைப்பதும் உண்டு. அதில் சில: காலம் எவ்வளவு தூரம் பயணித்துள்ளது/ ஒடுக்கப் பட்டவனுக்கும் கடவுளுக்குமான தூரம் மிகக் குறைவு/ தனிமைப்படல் அயல்நாட்டு வாழ்க்கையை விட கொடுமையான ஒரு வாள். /பெண் என்பவள் எக்காலமும் சபிக்கப்பட்டவள்தானா / பெண்ணின் மீது ஆண் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட இயறகையின் வஞ்சனைகள்.

ஆன்மீக நிகழ்வாக, பிரார்த்தனையாக, வலி வேதனையின் குறியீடுகளாக தன் கதைகளை இனம் காண்கிறவர் வெள்ளியோடன். சிறு வயது முதல் எழுத்துப் பயணித்திலே இருப்பவர். மூன்றாம் வெளியில் நடப்பட்ட பதிவுகள் தன் கதைகள் என்கிறார்.

இக்கதைகளின் தெளிவுக்குக்காரணம் மொழிபெயர்ப்பாளரின் தனித்தன்மைதான். அவர் கொங்கு நாட்டைச் சார்ந்தவர் என்பதால் மொழி பெயர்ப்பில் பல கொங்கு சொற்கள் சுலபமாக விளையாடுகின்றன.

உதாரணமாக தெல்லவாரி என்ற வார்த்தைகள்.... சில ஆங்கில வார்த்தைகள் மூல பிரதியில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் மொழி பெயர்ப்பில் அப்படியே தந்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம்.. எல்லா வகைப் பயணங்களிலும் சிறந்த அனுபவங்களை வரித்துக் கொள்ள முடியும் என்பதை நிரூபணம் செய்யும் இக்கதைகள் எழுத்தாளன் பயணிக்கும் தளங்கள் முந்தினத் தொகுப்பிலிருந்து வேறுபடுவதை நிச்சயம் ஒரு வரவாகவே கொள்ள வேண்டும்.

*(விரைவில் வெளிவர இருக்கும் நூல் :என்சிபிஎச் வெளியீடு, சென்னை)*

## சமூக விழிப்புணர்வின் மூலம் வரும் அரசியல் தலையீடு இளைஞர்கள் மத்தியில் வளர வேண்டும்

**மை**சூரில் வசிக்கும் எழுத்தாளர் ராமன் முள்ளிப்பள்ளம் திருப்பூரில் நடந்த தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் புத்தகங்கள் வெளியீட்டு விழாவில் பேசும் போது இப்படிக் குறிப்பிட்டார்:

“இன்று இலக்கியம் பெரும் கார்ப்பரேட்டுகள் தீர்மானிப்பதாக இருக்கிறது. டிஜிட்டல் சிந்தனைகள் மனித மூளையை மழுங்கடிப்பதாக இருக்கிறது. இன்று இலக்கியச் சந்தை கேளிக்கை தரும் விடயங்களையே தருகிறது. இன்றைய தலைமுறை கைபேசிகள், தொலைக்காட்சி தரும் கேளிக்கைகளில் மூழ்கிக் கிடக்கிறது. சமூக பொறுப்புணர்வுகளைத் தரும் அநீதியோடு சமரசம் செய்யாத எழுச்சி மிகு உணர்வுகளைத் தரும் நல்ல இலக்கியம் உருவாக்கப்படுவதும் அதை இன்றைய தலைமுறையினர் ஏற்பதும் பெரிய சவாலாக உள்ளது. சுதந்திரப் போராட்ட காலத்தில் மகாகவி பாரதியார் கொடுத்த கவிதைகளும் பாடல்களும் தேசபக்தி எழுச்சியை மக்கள் மத்தியில் ஊட்டியதாக இருந்தது. அது உதாரணம். இளைஞர்களின் இலக்கிய மையங்கள் பல இன்று முன் வந்து தரும் இலக்கியப் படைப்புகளான கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் உரிய சிறப்பு தரப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். சமூக விழிப்புணர்வின் மூலம் வரும் அரசியல் தலையீடு இளைஞர்கள் மத்தியில் வளர வேண்டும். இதுவே புதிய, நல்ல இலக்கியங்களுக்கு வழிவகுக்கும். பெரும் இலக்கியங்கள் பல நாடுகளில், பல கலாச்சாரங்களில் பலமுறை கடந்த காலங்களில் அடிப்படை சமூக மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அரசியல், அதிகார மாற்றத்திற் கான முன்னோடி இலக்கியம். சமூக மாற்றத்தினை பதிவு செய்யும் இலக்கியம் மக்களின் வாழ்க்கையை மாற்றும் சக்தி கொண்டது”